# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி
# திருப்பூர்







## ஆண்டு மலர் 2020 - 2021



"மிஸ்டர் திருப்பூர் 2021" போட்டியில்
மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி பயன்பாடு)
துறை மாணவன் இ.சஞ்சீவ்
வெற்றிப் பதக்கம் பெறுதல்



13-03-2021 மற்றும் 14-03-2021 ஆகிய தேதிகளில்
கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான
எழுவர் ஹாக்கிப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற
நம் கல்லூரியின் ஹாக்கி அணியினர்



கல்லூரியின் மகளிர் மன்றம்
மார்ச் 8, 2021இல் நடத்திய
சர்வதேச மகளிர் தின விழாவில் மூத்த வழக்கறிஞர்
சந்திரலேகா நம்பியார் அவர்களின் சிறப்புரை



26-02-2021இல் இயற்பியல் துறை மற்றும் IQAC
இணைந்து கொண்டாடிய தேசிய அறிவியல் தினத்தில்
தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவர்
திரு.ஈஸ்வரன் அவர்களின் சிறப்புரை



23-04-2021 அன்று உலக புத்தக தினத்தை முன்னிட்டு
கல்லூரி நூலகம் மற்றும் தமிழ்த்துறை இணைந்து வழங்கும்
குறும்பட முன்னோட்டத்தினை கல்லூரி முதல்வர்
அவர்கள் வெளியிடுதல்



தமிழ்நாடு அரசின் விலையில்லா 2GB
தரவு அட்டைகள் வழங்கும் திட்டத்தினை 22-02-2021 அன்று
மாவட்ட ஆட்சியர் அவர்கள் தொடங்கி வைத்தல்

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
தேசிய தர மேம்பாட்டுக் குழு (NAAC)வின்
B மதிப்பு பெற்றது
கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602.




குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது
-பூதஞ்சேந்தனார்

# ஆண்டு மலர்

# 2020 - 2021

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
தேசிய தர மேம்பாட்டுக் குழு (NAAC)வின்
B மதிப்பு பெற்றது
கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602.




# ஆண்டு மலர்

# 2020 - 2021

# மலர்க்குழு

## தலைவர்

முனைவர் வ.கிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

- - -

## முதன்மை ஆசிரியர்கள்

முனைவர் சி.அமிர்தராணி
இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை

பேரா. இரா.செங்கமுத்து
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் லா.ரூபி கிறிஸ்டி
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை



# மலர் முகம்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஒரு சிறந்த ஆசிரியர் கசடறக் கற்று அதன்படி நின்று கற்பிக்கும் போதுதான் வருங்கால மாணவர்களை முழுமையான ஆளுமைப் பண்பு உடைய வர்களாக மாற்ற முடியும்.

கல்வியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று மாணவர்களுடைய படைப்பாற்றல் திறனை வெளிக்கொணர்வதாகும். அப்படைப்பாற்றல் திறனை மேம்படுத்தும் முயற்சியாக ஆசிரிய, மாணவ, மாணவிகளின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் கல்லூரியின் ஆண்டு மலர் 2020-21 இப்பொழுது உங்கள் கைகளில்.

கல்லடிபட்டாலும் கனிகளைத் தர
மறுப்பதில்லை நல்மரங்கள்

இவ்வாண்டில் கொரோனா பெருந்தொற்று மானுட வாழ்க்கையைப் புரட்டிப் போட்டநிலையில் மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் படைப்புகளைப் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் இருந்த பொழுதும் மலர்க்குழுவின் பெரும் முயற்சி அவற்றை வென்றெடுத்து இம்மலர் வெளிவர வழிவகை செய்துள்ளது. மாணாக்கர்களின் படைப்புகளில் இன்றைய சமூக நிலை மற்றும் எதிர்காலக் கனவுகள் மிளிர்வதைக் காண முடிகின்றன. 'தம்மினும் தம்மக்கள் அறிவுடையோர்' என்ற கூற்றிற்கேற்ப மாணாக்கர்களின் படைப்புகள் அமைந்திருப்பது பெருமகிழ்ச்சியே. படைப்புகளில் இடம் பெறும் கருத்துகள் அனைத்திற்கும் படைப்பாளர்களே பொறுப்பாளர் ஆவார்கள்.

இளைய சமுதாயத்தின் இணையில்லா சிந்தனை ஆற்றலை, படைப்புத்திறனைத் தாங்கி இம்மலர் வெளிவருகிறது. இம்மலர் உருவாக்கத்தில் எங்களோடு துணைநின்ற நம்முடைய கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அச்சகத்தார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியை நவில்கின்றோம்.

இவண்
மலர்க்குழு

# உள்ளே


1. ஆண்டறிக்கை
2. திருப்பூர்
3. வரதட்சணை
4. மம்மி
5. இயற்கையின் அதிசயம்
6. வினாடி - வினா
7. சிக்கண்ண செட்டியார்
8. வாழ்க்கையின் பக்கங்கள்
9. ஆசிரியர்
10. பாரம்பரியக்கலை
11. பெண்கல்வி
12. நட்பு
13. அப்பா
14. நிலா
15. இளைஞனே
16. கதறும் பாரதம்
17. மனிதநேயம்
18. சிரிக்க மட்டும்
19. மகத்தான மனிதர்கள்
20. அம்மா
21. ஆணுக்குப்பெண் அடிமையா?
22. உரிமைக்குரல்
23. கொரோனா
24. மறந்து போன கலாச்சாரம்
25. நீரின் முக்கியத்துவம்
26. நாட்டு நலப்பணித்திட்டம்
27. தொலைத்த உறவுகள்
28. உழைப்பாளர் தினம்
29. சாதித்த மகளிர்
30. மழை
31. நீரின்றி அமையாது உலகு
32. REVIEW ON RED MARS
33. NEUROTHERAPY
34. PROJECT SOLI BY GOOGLE
35. STEPS TO OVERCOME PANDEMIC CRISIS
36. SPREADING POSITIVITY
37. THE PHOTOGRAPHERS
38. BELOVED MOTHER
39. TRICKY RIDDLES
40. ஓவியங்கள்




கல்லூரி முதல்வருடன்
கல்லூரி ஆட்சிக் குழுவினர்




நாட்டு நலப்பணித் திட்டம் தெற்கு மண்டலத்தின் சார்பில் நடத்தப்பட்ட
குடியரசு தின அணிவகுப்பு ஒத்திகை முகாமில் பங்குபெற்ற
நம் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவன் பாலமுருகன்
மற்றும் மாணவி கோகிலவாணி



தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ்
கல்லூரி சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்ட
நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2
மாணவ மாணவியர்கள்



நம் கல்லூரி வளாகத்தில்
நாட்டு நலப்பணித் திட்டம்
அலகு 2 சார்பில் கார்கில் நினைவு தினம்
அனுசரிக்கப்பட்ட போது



32ஆவது சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு
மாதத்தில் நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2
மாணவர்களின் உறுதிமொழி




நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2
மாவட்ட ஆட்சியர் அவர்களிடம்
சிறப்பு விருது பெற்றபோது



நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2 மாணவர்கள்
கொரோனா விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களைப்
பொது மக்களுக்கு விநியோகிக்கும் போது



**S.Pandiyarajan**
**University IV Rank**
**UG History**



**A.Palanisamy**
**University III Rank**
**PG Chemistry**



**D.Kasthuri**
**University IX Rank**
**PG Physics**




சாமுண்டிபுரம் மனவளக்கலை மன்ற
அறக்கட்டளை நடத்திய
யோகா பயிற்சியின் துவக்க விழாவில்
பிரபல தொழிலதிபர் திரு.மெஜஸ்டிக் கந்தசாமி
அவர்களின் சிறப்புரை



06-01-2021 இல் வணிகவியல் துறை ஆராய்ச்சி
மாணவர்களுக்கு நடத்திய
Students Enrichment Programme இல்
அவிநாசி அரசு கல்லூரியின்
பேராசிரியர் முனைவர் டேவிட் சௌந்தரராஜன்
அவர்களின் சிறப்புரை





இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக
கல்லூரி வளாகத்தில் வழங்கப்பட்ட மனவளக்கலை யோகா பயிற்சி

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்

## ஆண்டறிக்கை

## 2020 – 2021 கல்வியாண்டு

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரி இந்த 55 ஆண்டு காலத்தில், இந்த ஊருக்கு மட்டுமல்ல தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்து கல்வி பயின்ற பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டின் இறுதியில், கொரோனா பேரிடர் காரணமாக, அரியர் தேர்வுகள் நடைபெறாத நிலையில், பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் இளநிலைப் பட்ட வகுப்பு மாணவர்கள் 47.15% தேர்ச்சியும் மற்றும் முதுநிலைப் பட்ட வகுப்பு மாணவர்கள் 60.6% தேர்ச்சியும் பெற்றுள்ளனர். இளநிலைப் பட்ட வகுப்புகளில் வரலாற்றுத் துறையில் எஸ். பாண்டியராஜன் 4-ஆம் இடத்தையும், முதுநிலைப் பட்ட வகுப்புகளில் வேதியியல் துறையில் எ. பழனிச்சாமி 3-ஆம் இடத்தையும், இயற்பியல் துறையில் டி. கஸ்தூரி 9-ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். பாரதியார் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியர் தத்தம் துறைகளுக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழக அரசின் சார்பில் ரூ.1.35 கோடி மதிப்பில் 7 வகுப்பறைகள் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளன. மேலும், ரூ.284 கோடி மதிப்பில் 10 வகுப்பறைகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. **RUSA** நிதியின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பில் **'B'** பிளாக்கில் கழிப்பறைகள புதுப்பித்தல் மற்றும் விரிவாக்குதல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. **RUSA** திட்டத்தின் மூலம் பெறப்பட்ட நிதியினைக் கொண்டு அனைத்துத் துறை மாணவர்களும் பயன்பெறும் வகையில் 30 கணினிகள் கொண்ட கணினி ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இயற்பியல், வேதியியல், ஆடை வடிவமைப்பு துறைகளுக்கு LCD Projector and Screens வாங்கப்பட்டுள்ளது. புதிதாக தொடங்கப் பட்டுள்ள துறைகளுக்குக் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கப்பட்டுள்ளன. மொபைல் பயன் பாடுகளை உருவாக்க நூலக ஆட்டோமேசனுக்காக ஆட்டோலிப் சாப்ட்வேர் **RUSA** நிதியின் மூலம் வாங்கப்பட்டுள்ளது.

இக்கல்வியாண்டில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பிரிவில் 1173 மாணவர்களுக்கும், 463 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் சேர்த்து 44 இலட்சத்து 78 ஆயிரத்து முந்நூற்று பன்னிரெண்டு ரூபாய் கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வழியில் பயிலும் 400 மாணவர்களுக்கு 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

22.02.2021 அன்று தமிழக அரசின் விலையில்லா 2 GB தரவு அட்டைகள் இக்கல்லூரியின் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் வழங்கும் திட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரால் தொடங்கப்பட்டது. இக்கல்வி யாண்டில் மாணாக்கர்கள் கல்லூரி நூலக சேவைகளைத் தங்கள் உள்ளங்கைகளிலேயே பெறும்படி Mobile Android App அமைக்கப்பட்டு டிஜிட்டல் நூலகம் செயல்பட்டு வருகிறது.

மெஜஸ்டிக் ஏற்றுமதி நிறுவன நிருவாக இயக்குநர் திரு. கந்தசாமி அவர்கள் மாணவர்களின் நலன் கருதி, நம் வேண்டுகோளுக்கிணங்க ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக இரண்டு சக்கர வாகன நிறுத்தம அமைத்துக் கொடுத்தார். திருப்பூர் தெற்கு ரோட்டரி சங்கம் சார்பில் 10 எண்ணிக்கையிலான புத்தக அலமாரி கள் பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

கணினி அறிவு காலத்தின் கட்டாயத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு கணினி அறிவியல் பாடம் பயிலாத மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட கணினி அறிவொளித் திட்டத்தின் கீழ் 599 மாணவ, மாணவியரு க்குக் கணினிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கருத்தினை அடிப்படை நோக்கமாகக் கொண்டு நாட்டு நலப் பணித்திட்டம் 4 அலகுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. நாட்டுநலப்பணித்திட்டம் அலகு 2-இன் சார்பாக 05.06.2020 அன்று கொண்டாடப்பட்ட உலக சுற்றுச்சூழல் தினத்தில் திருப்பூர் மாவட்ட சுகாதார அலுவலர் திரு. பூபதி அவர்களின் முன்னிலையில் கொரோனா மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுவர் ஓவியம் வரைதல், திருப்பூர் குமரன் நினைவு பூங்காவில் தண்ணீர் ஊற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடை பெற்றன. உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு 14.06.2020 அன்று இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப பட்டது. கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டுத் தனிமையில் இருந்த மக்களை நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்கள் கண்காணித்து வந்தனர். பொதுமக்களுக்கு இலவசமாக முகக்கவசங்கள், கபசுரக் குடிநீர் மற்றும் கிருமிநாசினிகள் வழங்கப்பட்டன. 15.07.2020 காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளில் தத்தெடுக்கப்பட்ட கணக்கம்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற மரக்கன்று நடும் விழாவில் பஞ்சாயத்து தலைவர் சண்முகசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கல்லூரி வளாகம், நூலகம், ரயில் நிலையம் ஆகிய இடங்களை நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் சுத்தம் செய்தனர். 24.09.2020 அன்று இக்கல்லூரி முதல்வர் வ.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில் நாட்டுநலப் பணித்திட்ட தினத்தை முன்னிட்டு திருவள்ளுவர் நர்சரி கல்லூரி வளாகத்தில் உருவாக்கப்பட்டது. 19.11.2020 அன்று நாட்டுநலப்பணித்திட்டம் அலகு-2 மற்றும் திருப்பூர் குளங்கள் பாதுகாப்பு அமைப்பு சார்பில் நஞ்சராயன் குளக்கரையில் மரக்கன்று நடும் விழாவில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் பங்கேற்றனர். கொரோனா ஊரடங்கிற்குப் பின் கல்லூரி திறக்கப்பட்ட நாளான 07.12.2020 அன்று கல்லூரி மாணவர்களுக்குக் கொரோனா நோய்த்தொற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி, இலவசமாக முகக்கவசங்கள் வழங்குதல், மாணவர்களின் உடல் வெப்பநிலை பரிசோதனை ஆகியவற்றை நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் மேற்கொண்டனர். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் உடல் நலம் குறித்து திருப்பூர், மருத்துவக் கல்லூரி டீன் முனைவர் வள்ளி சத்தியமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினார். புற்றுநோயாளிகளுக்கு முடி தானம் வழங்குவதற்காக 13.03.2021 அன்று கல்லூரி வளாகத்தில் ஆசிரியைகள் மற்றும் மாணவிகள் முடி தானம் வழங்கினார்கள்.

32-ஆவது சாலைப்பாதுகாப்பு விழாவை முன்னிட்டு நாட்டுநலப்பணித்திட்டம் அலகு-2 மாணவர்கள் திருப்பூர் மாநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்குபெற்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். திருப்பூர் சந்திரகாவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் முதியோர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தனர். சர்வதேச புகையிலை ஒழிப்பு தினம், யோகா தினம், மக்கள் தொகை தினம், உணவு தினம், எய்ட்ஸ் தினம், தொழு நோய் விழிப்புணர்வு தினம் உள்ளிட்ட பல்வேறு தினங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு, சமூக நல்லிணக்கம், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஆகியன குறித்து நாட்டுநலப்பணித்திட்டம் அலகு-2 மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நாட்டு நலப்பணித்திட்டத்துடன் இணைந்து கல்லூரியின் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நாட்டு நலப்பணித் திட்டம் அலகு -2- இன் சார்பாக "Covid-19 Pandemic", "Fit India" என்ற தலைப்பில் தேசிய அளவில் நடைபெற்ற இணைய வழி வினாடி-வினாப் போட்டிகளில் ஏராளமானோர் கலந்து கொண்டு 'e' சான்றிதழ் பெற்றனர். 15.08.2020 அன்று நாட்டுநலப் பணித்திட்டம் அலகு -2 சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 'Garbage Free India' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேச முன்னாள் ஆளுநர் மேதகு. சண்முகநாதன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். மேலும், அப்துல் கலாம் பிறந்த நாளை முன்னிட்டு NSS -2 சார்பில் 15.10.2020 அன்று நடைபெற்ற இளைஞர் எழுச்சி நாள் இணைய வழிக் கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் வ. கிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

"இமயச்சாரலில் ஒருவன் இருமினான், குமரி வாழ்வான் மருந்து கொண்டு ஓடினான்" என்ற வரிகளுக்கு ஏற்ப இந்தியா ஒற்றுமையுடனும், அமைதியுடனும் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் நாட்டின் பாதுகாப்பு பணியில் இருக்கும் இராணுவமே. இராணுவத்தின் முதற் படியான தேசிய மாணவர் படை நம் கல்லூரியில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்குபெறுவதற்கான தேர்வு முகாம் கோவையில் உள்ள 4 (தநா) பட்டாலியனில் 25.08.2020 முதல் 28.08.2020 வரை நடைபெற்றது. இதில் நம் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கல்லூரி வளாகத்தினைத் தூய்மை செய்யும் பணி 09.01.2021 தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர்களால் மேற்கொள்ளப்பட்டது. 26.01.2021 அன்று நடைபெற்ற சைக்கிளத்தானில் (Cyclothon) 30 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

11.02.2021 முதல் 13.02.2021 வரை சூலூரில் உள்ள RVS கலைக்கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு முகாமில் நமது கல்லூரியைச் சார்ந்த தேசிய மாணவர் படை அதிகாரி கேப்டன் பா. கனகராஜ் மற்றும் 12 மாணவ, மாணவியரும் கலந்து கொண்டனர். இம்முகாமில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் நம் கல்லூரி 9 பதக்கங்களை வென்றது. கோவை அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரின் வெற்றிக் கொண்டாட்ட விழாவில் நம் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவி வாசுகிதேவி பதக்கம் வென்றார். 06.03.2021 முதல் 07.03.2021 வரை கோயம்புத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'B" சான்றிதழுக்கான தேர்வில் 14 மாணவ, மாணவியரும், 27.03.2021 முதல் 28.03.2021 வரை நடைபெற்ற 'C" சான்றிதழுக்கான தேர்வில் 13 மாணவ, மாணவியரும் பங்குபெற்றனர்.

'சுதந்திரம் என்பது ஒரு சலுகையல்ல, அது உரிமை' என்ற தலைப்பில் இணைய வழி பேச்சுப் போட்டியினை 10.12.2020 அன்று நம் கல்லூரியின் RUSA Ek Bharath Shreshtha Bharath (**EBSB**) நடத்தியது. மேலும், 30.01.2021 அன்று 'Kashmir - Its Origin, Culture and Ethnicity' என்ற தலைப்பில் தேசிய அளவில் இணையவழிக் கருத்தரங்கினை நடத்தியது. இதில் ஜம்மு காஷ்மீர், பீர்வா, அரசு பட்டக் கல்லூரி, சமூகவியல் துறைத்தலைவர், முனைவர் முஸ்தாக் அகமது மல்லா அவர்கள் சிறப்புரையாற்றினார்.

மகளிர் மன்றம் சார்பில் 08.03.2021 அன்று சர்வதேச மகளிர் தின விழா மூத்த வழக்கறிஞர் சந்திரலேகா நம்பியார், ஷகிலா பானு மற்றும் காசர் பானு ஆகியோரைச் சிறப்பு விருந்தினர்களாகக் கொண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலும், பல்வேறுப் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

'போட்டித் தேர்வுகளில் மாணவர்களுக்கான வாய்ப்புகள் மற்றும் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள்' என்ற தலைப்பில் 20.03.2021 அன்று இக்கல்லூரி வேலைவாய்ப்பு வழிகாட்டல் மையம் நடத்திய இணையவழிப் பயிற்சியில் கோவை அரசு கலைக்கல்லூரியின் இணைப்பேராசிரியர் முனைவர் P.கனகராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். 12.04.2021 அன்று Southern India Regional Council of ICAI and TANSCHE இணைந்து மாணவர்களுக்கான மாபெரும் தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை இணையவழியில் வழங்கின. இப்பயிற்சியில் நம் கல்லூரியிலிருந்து 203 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

"உடம்பை வளர்த்தேன்! உயிர் வளர்த்தேனே" என்பார் திருமூலர். உடல் நன்றாக இருந்தால் தான் அதில் உயிர் தங்கும். உடல் நன்றாக இருக்க வேண்டுமென்றால் உடற்பயிற்சி இன்றியமையாதது. இந்த உடற்பயிற்சி வெறும் பயிற்சியாக இல்லாமல், பல்வேறு விளையாட்டுகளின் மூலம் மாணவர்களைப் பங்கு பெறச் செய்து அவர்களை ஊக்குவிப்பதாகும். இச்செயலை கல்லூரி உடற்கல்வித் துறை மிகச்சிறப்பாக செய்து வருகின்றது. 13.03.2021 மற்றும் 14.03.2021 -இல் நம் கல்லூரியில் சிக்கண்ணா ஹாக்கி கிளப் சார்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மாநில அளவிலான எழுவர் ஹாக்கிப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 9 அணிகள் ஆண்கள் பிரிவிலும், 8 அணிகள் பெண்கள் பிரிவிலும் கலந்து கொண்டன. ஆண்களுக்கான பிரிவில் நம் கல்லூரி இரண்டாம் இடத்தை பிடித்தது. இரண்டாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவி மோனிஷா மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். மூன்றாமாண்டு வணிகவியல் கணினி பயன்பாட்டு மாணவன் இ.சஞ்சீவ் **TIRUPUR DISTRICT AMATEUR BODY BUILDING ASSOCIATION** – நடத்திய Mr. TIRUPUR 2021 ஆணழகன் மற்றும் உடற்தகுதி போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றார். மேலும், இம்மாணவன் 14.03.2021 அன்று மாவட்ட அளவில் நடைபெற்ற Mr. ANYTIME CLASSIC போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசினைப் பெற்று இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

திருப்பூர், சாமுண்டிபுரம் அறிவுத் திருக்கோயில் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையுடன் இணைந்து இரண்டாமாண்டு மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக யோகா பயிற்சி வழங்கப்பட்டது.

கணிதத்துறையில் முனைவர் க. சசிகலா மற்றும் முனைவர் தி. நற்பசலையரசு ஆகியோர் முனைவர் பட்டம் பெற்றனர்.

இயற்பியல் துறையில் முனைவர் ஹரேஷ் ம.பாண்டியா, முனைவர் க.பா. ராஜேஷ் ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், கணினி அறிவியல் துறையில் முனைவர் சு.துரைசாமி, முனைவர் கே. நந்தினி, முனைவர் கோ.மு. நசீரா ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், வணிகவியல் துறையில் முனைவர் ந. ராஜா, முனைவர் கோ.வேணுகோபால், முனைவர் கோ. ரவீந்திரன் ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் மாறுதல் பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில் 8 பேரும் கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் வாயிலாக முனைவர் பட்டம் பெற்றனர்.

ஆய்வியல் நிறைஞர் பட்டங்களை இயற்பியல் துறையில் முனைவர் அண்ணாமலை, முனைவர் இரா. சக்திசுடர் சரவணன் ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், வணிகவியல் துறையில் முனைவர் பா. கனகராஜ், முனைவர் அ. முருகானந்தம் ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், நூலகத துறையில் முனைவர் ஆ. சித்ரா தவப்புதல்வி அவர்களின் வழிகாட்டலில் ஒருவரும் கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் வாயிலாகப் பெற்றனர்.

வரலாற்றுத் துறையில் முனைவர் ர. சங்கமேஸ்வரன், திரு.சி. குருசந்திர பத்மன், வேதியியல் துறையில் முனைவர் பெ. விஜயன் ஆகியோர் சென்னை பல்கலைக் கழகத்திலும், கணிதத் துறையில் திருமதி மோ. கீதாலட்சுமி, முனைவர் க.சசிகலா, திரு.து.சரவணன், முனைவர் தி.நற்பசலை அரசு, முனைவர் சு.சேகர், முனைவர் அ. ராதாரமணி மற்றும் ஆடை வடிவமைப்பு நாகரிகத் துறையில் முனைவர் ச. கற்பகம் சின்னம்மாள். முனைவர் இ. ஜெயலட்சுமி ஆகியோர் டெல்லி பல்கலைக் கழகம், இராமனுஜம கல்லூரியிலும், கணிதத் துறையில் திரு. கா. சுரேஷ்குமார், வணிகவியல் துறையில் முனைவர் கோ. வேணு கோபால் மற்றும் சர்வதேச வணிகவியல் துறையில் திருமதி. வி. மணிமேகலை ஆகியோர் திருச்சி பாரதி தாசன் பல்கலைக் கழகத்திலும், கணிதத் துறையில் முனைவர் இரா. விஜயக்குமாரி, வணிகவியல் துறையில் முனைவர் க. ராஜா மற்றும் நூலகத் துறையில் முனைவர் ஆ. சித்ரா தவப்புதல்வி ஆகியோர் கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்திலும், கணினி அறிவியல் துறையில் முனைவர் ஆ. கீதா, கேரளா, கண்ணூர் பல்கலைக் கழகத்திலும் இணைய வழியில் புத்தாக்கப் பயிற்சிப் (Refresher Course) பெற்றனர்.

வேதியியல் துறையில் முனைவர் கு. ராஜகோபால், முனைவர் சு.ப. ராஜா சிங், முனைவர் சீ. கார்த்திகேயன், முனைவர் ம. சிவதயாநிதி ஆகியோர் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும், கணினி பயன்பாட்டியல் துறையில் திருமதி. த. சுதா, திருமதி சி. சரஸ்வதி ஆகியோர் கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்திலும் குறுகிய காலப் பயிற்சி பெற்றனர். கணினி அறிவியல் துறையில் முனைவர் அ. குமார் கொம்பையா வேலூர் அரசு கலைக் கல்லூரி நடத்திய ஒரு வார கால Faculty Development Programme -இல் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஹரேஷ் ம. பாண்டியா அவர்கள் 3 ஆண்டுகளுக்கு கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இணையம் மூலமாக மாணவர் சேர்க்கை விண்ணப்பம் பெறுவதற்கான வலைதளம் ஏற்படுத்த கல்லூரிக் கல்வி இயக்குநரால் அமைக்கப்பட்ட குழுவில் வேதியியல் துறைத் தலைவர் முனைவர் கு. ராஜகோபால் இடம் பெற்று அவ்வலைதளம் உருவாக்க சிறப்பாகப் பணியாற்றினார். வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு.ப. ராஜாசிங் அவர்கள் Seshasayee Institute of Technology, Trichy, நடத்திய 5 நாள் இணைய வழிக் கருத்தரங்கில் 19.08.2020 அன்று "Chemistry's Impact on the Modern World" என்ற தலைப்பில் உரையாற்றினார். 07.04.2021 அன்று CSIR நிதியுதவியுடன் கும்பகோணம், அரசு பொறியியல் கல்லூரியில் Green and Sustainable Chemistry என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சீ. கார்த்திகேயன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு "நானோ பொருட்கள்" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கி யுள்ளார். கணினி பயன்பாட்டியல் துறைத் தலைவர் முனைவர் கோ. மு. நசீரா ஈரோடு, வேளாளர் மகளிர் கலைக் கல்லூரியில் Machine Learning என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார். ஆடை வடிவமைப்பு நாகரிகத் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இ. ஜெய லட்சுமி அவர்களுக்கு 05.10.2020 அன்று சர்வதேச ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பேராசிரியர் இமயம் விருதும், 25.11.2020 அன்று பாபநாசம், திருவள்ளுவர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சீரிய சமுதாய செயல்பாட்டாளருக்கான அன்னை தெரசா பன்னாட்டு விருதும் வழங்கப்பட்டது.

வணிக நிர்வாகவியல் துறையில் முனைவர் ஆ. ஜெலின்ஸ் தினகர் உதகை அரசு கலைக் கல்லூரி நடத்திய தேசிய அளவிலான இணைய வழிக் கருத்தரங்கில் Assertiveness: A Winning Style of Communication என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கல்லூரி நூலகர் முனைவர் ஆ. சித்ரா தவப்புதல்வி உலக புத்தக தினத்தை முன்னிட்டு சங்கரன் கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், திருப்பூர் LRG அரசு மகளிர் கலைக் கல்லூரியிலும் இணைய வழியில் சிறப்புரை வழங்கினார்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் ஆங்கிலத் துறை, வரலாற்றுத் துறை, கணிதத் துறையில் திரு.கா. சுரேஷ்குமார் **Test Series for CSIR/NBHM/GATE/TIFR Aspirants**, கணினி அறிவியல் துறையில் முனைவர் இரா. சங்கர், முனைவர் சீ. மீனாட்சி, முனைவர் சு. துரைசாமி, கணினி பயன்பாட்டியல் துறை, வணிகவியல் துறையில் முனைவர் பா. ராஜசேகரன் 'மேலாண்மைக் கணக்கியல்' முனைவர் சு. பொன்னையன் 'சந்தையியல்' ஆகிய தலைப்புகளில் தேசிய அளவில் நடத்திய இணைய வழி வினாடி-வினாப் போட்டிகளில் ஏராளமானோர் கலந்து கொண்டு "e" சான்றிதழ் பெற்றனர்.

03.06.2020- இல் ஆங்கிலத் துறை நடத்திய இணைய வழிக் கருத்தரங்கில் திருவாடானை அரசு கலைக் கல்லூரி ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் P. மணிமேகலை சிறப்புரையாற்றினார். பன்னாட்டு தொல்லியல் தினத்தை முன்னிட்டு "கீழடி அகழாய்வு" என்ற தலைப்பில் வரலாற்றுத் துறை சார்பில் 17.10.2020 அன்று நடைபெற்ற இணைய வழிக் கருத்தரங்கில் கரூர் அரசு கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் து. செல்வகுமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இயற்பியல் துறையில் யுனெஸ்கோ சர்வதேச ஒளி நாளை முன்னிட்டு 11.06.2020 முதல் 13.06.2020 வரை Lasers, Optics and Photonics என்ற தலைப்பில் நடைபெற்ற சர்வதேச இணைய வழிக் கருத்தரங்கில் அமெரிக்கா, பாகிஸ்தான், ஜெர்மனி, இத்தாலி, சுவீடன், கனடா உள்ளிட்ட 15 நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். 21.07.2020 முதல் 05.08.2020 வரை வேதியியல் துறை சார்பில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் இணையவழிப் பயிலரங்கங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். சர்வதேச கருத்தரங்கில் முனைவர் பெரியசாமி அருள்பிரகாஷ், சர்ரே பல்கலைக் கழகம், முனைவர் சி. சுரேஷ், மூத்த விஞ்ஞானி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். 09.04.2021 அன்று தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின் (TNSCST) நிதியுதவியுடன் "நானோகாம்போசிட் பொருட்களிலிருந்து புற்றுநோய் எதிர் மருந்துகள் (Anti cancer drugs from nanocomposite materials) என்ற தலைப்பில் தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கு வேதியியல் துறை சார்பில் இணையவழியில் நடைபெற்றது. 12.02.2021 அன்று விலங்கியல் துறையில் "நுண்ணுயிரி நெகிழி மற்றும் கடல் குப்பை" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஒரு நாள் கருத்தரங்கில் சென்னை, தேசிய கடல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானி முனைவர் டி. மோகன் சிறப்புரையாற்றினார். 12.03.2021 அன்று நடத்தப்பட்ட முப்பெரும் விழாவில் வன உயிரின பாதுகாப்பு திரைப்படத் தயாரிப்பாளர் திரு. கோவை சதாசிவம் சிறப்புரையாற்றினார். விலங்கியல் துறை மாணவர்கள் நஞ்சராயன் குளத்தில் பறவைகள் கணக்கெடுப்பு நடத்தினர். கணினி அறிவியல் துறையில் Cloud Computing என்ற தலைப்பில் சர்வதேச அளவிலும், Moodle - A Quick Tour என்ற தலைப்பில் தேசிய அளவிலும், Project Management - an Industry Perspective மற்றும் Recent Trends in Advanced Computing ஆகிய தலைப்புகளில் துறை அளவிலும், இணைய வழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. கணினி பயன்பாட்டியல் துறையில் 17.06.2020 முதல் 19.06.2020 வரை International Wired Web Series என்ற தலைப்பில் இணைய வழிக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

வணிகவியல் துறையில் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், முதலீட்டு வழிகள் மற்றும் வணிகவியல் பட்ட தாரிகளுக்கான உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகள் ஆகிய தலைப்புகளில் பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்களைக் கொண்டு Students Enrichment Programme நடத்தப்பட்டது.

07.08.2020 அன்று மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் National Digital Library of India–வுடன் இணைந்து கல்லூரி நூலகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய அளவிலான இணைய வழிக் கருத்தரங்கில் NDLI –இன் முதன்மை அலுவலர் முனைவர் விக்னேஷ் சொர்ணமோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டு, 04.09.2020 முதல் செல்வி ச. தாரணி மற்றும் 09.09.2020 முதல் திருமதி. ஜெ. சங்கீதா ஆகியோர் இக்கல்லூரி அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் சி.வி. தீபா அவர்கள் பதவி உயர்வு கிடைக்கப் பெற்று, சென்னையில் கல்லூரிக் கல்வி இணை இயக்குநராக (நிதி) 22.09.2020 அன்று பதவியேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, இரண்டாம் நிலைக் கல்லூரியான நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் வ. கிருஷ்ணன் அவர்கள் முதல்நிலைக் கல்லூரி முதல்வராக 22.09.2020 அன்று பதவி உயர்வு கிடைக்கப்பெற்று இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகிறார்.

கல்லூரி சிறப்பாக நடைபெற எல்லாவிதத்திலும் உறுதுணையாக விளங்கும் அனைத்து நல் இதயங்களையும் இந்நேரத்தில் வாழ்த்திப் பாராட்டுகிறேன். நன்றி. வணக்கம்.

# திருப்பூர்

புராணத்தின்படி மகாபாரத காலத்தில் விராடபுரத்திலிருந்து (இன்றைய தாராபுரம்) களவுபோன பாண்டவர்களின் கால்நடைகளை அர்ஜுனன் திருப்பூரில் திருப்போர் புரிந்து மீட்டுத் திரும்பியதாலும், மீட்டுத் திரும்பிய ஊர் என்ற பொருளிலும் திருப்பூர் என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

புறநானூற்றுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு சங்க கால சேர மன்னன் கணைக்கால் இரும்பொறைக்கும், சோழ மன்னன் செங்கண்ணனுக்கும் இடையே இவ்விடத்தில் நடைபெற்ற போரில் மாவீரனான சேரன் கணைக்கால் இரும்பொறை தோல்வியுற்று கைது செய்யப்பட்டதால் அவமானம் தாங்காது உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்தான். மானத்துக்காக உயிர்துறந்ததால் அப்போர் திருப்போர் என அழைக்கப்பட்டு அவ்விடம் திருப்போர்ப்புரம் என்று குறிப்பிடப்பட்டு பின்னாளில் திருப்பூர் என பெயர் பெற்றதாகக் கருதப்படுகிறது.

ஸ்ரீபுரி (லட்சுமி வாசம் செய்யும் ஊர்) என்றும் முற்காலத்தில் திருப்பூருக்கு மற்றொரு பெயர் வழங்கிவந்ததாகவும் தெரிகிறது. திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயில் வரலாற்றுக் கையேட்டில் குலோத்துங்கன் செங்கண்ணன் ஆட்சிக்காலத்தில் பல வளம் நிறைந்த ஸ்ரீபுரி என்று திருப்பூர் அழைக்கப்பட்டதாகப் பதிக்கப்பட்டுள்ளது.

திருப்பையூர், திலுப்பூர் என பழங்காலத்தில் பயின்று வந்ததே பின்னாளில் மருவி திருப்பூர் என அழைக்கப்படுவதாகவும் கருதப்படுகிறது.

ஆர்.அருள்குமார்
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# வரதட்சணை

கத்தி இல்லாமல் ரத்தம் இல்லாமல் கொல்லும் கொடிய நோய்

புத்தி இல்லாமல் புரிதல் இல்லாமல்

எத்தனையோ ஏழைப் பெண்களைக் கண்ணீர்க்கடலுக்குள் மூழ்கடிக்கும்

பணத்திற்கு ஆசைப்பட்டு பெண்களைப் பிணக்குழியில் தள்ளிவிடும் பேய்

ஆகவே பேரிடர்தரும் இந்த வரதட்சணையை

பாரினில் இல்லாமல் அழிப்பதற்கு

உடல் அழகையும் நகை அணியையும் பார்க்காமல்

உள்ளத்தில் அணியும்

பூக்கும் புன்னகையை உலகம் பார்க்கட்டும்

எம்.ஜெயலட்சுமி
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# மம்மி
# (70 நாள்கள் அதிசயம்)

மரணம் நிச்சயம், அது மறுஉலகிற்கு அழைத்துச்செல்லும் வாசல் என்பது எகிப்தியர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. இதனால்தான் இறந்தவர்களின் உடலை மம்மியாக மாற்றினார்கள். மம்மியாக்கப்படுவதற்குச் செல்வம் ஒரு அளவுகோலாக இருந்தது. நாடாண்ட மன்னர், அவரது வாரிசுகள், மன்னருக்கு நெருக்கமானவர்கள், முக்கியப் பதவி வகித்தவர்கள், மன்னருக்கு உடனிருந்து பணிவிடை செய்தவர்கள் மம்மி ஆக்கப்பட்டனர். மதகுருமார்கள் இதற்கு அடுத்த இடத்தில் இருந்தனர்.

மன்னர் அல்லது மம்மியாக வைக்கப்பட வேண்டியவர் உயிருடன் இருக்கும்போதே அவரது கல்லறைக்கான இடம் தேர்வுசெய்யப்படும். அந்தக் கல்லறையில் அவரது வீரச்செயல்களைக் குறிக்கும் ஓவியங்கள் வரையும் பணி அவரது மேற்பார்வையிலேயே நடைபெறும். கல்லறைப் பிரமிடுகளில் வைக்கவேண்டிய பொருள்கள் சேகரிக்கப்பட்டவுடன் கல்லறைப்பணிகள் நிறைவுபெறும். அந்த நபர் இறந்தவுடன் முதல்கட்டமாக உடலைப் பதப்படுத்தும் பணிகள் தொடங்கும். மம்மி செய்யும் இடம் "இபு" எனப்பட்டது. இறந்தவர் உடலை அங்கு கொண்டுசென்று இறுதிச்சடங்குகளைச் செய்வார்கள். பின்னர் நைல் நதியில் இருந்து எடுத்து வரப்பட்ட புனித நீராலும் பனைமரத்தில் இருந்து எடுக்கப்பட்ட நீராலும் உடல் சுத்தம் செய்யப்படும்.

அடுத்து மம்மி செய்யும் மருத்துவப்பணிகள் தொடங்கும். வேகமாக அழுகக்கூடிய உறுப்புகளை அகற்றுவதே முதற்கட்டப் பணி. உடலை அறுக்காமலேயே இவற்றை வெளியே எடுத்துள்ளனர். நீண்ட மெல்லிய கம்பியை மூக்குத்துவாரம் வழியாகச் செலுத்தி மூளை முழுவதையும் முதல்கட்டமாக அகற்றுவார்கள். அடுத்து உடலில் இடப்பக்கம் சிறிய துவாரம் இட்டு அதுவழியாக பெருங்குடல், சிறுகுடல், வயிற்றுப்பகுதி, ஈரல் ஆகியவற்றை அகற்றுவார்கள். இவற்றை உப்புநீரில் ஊறவைத்து தனிக்குடுவையில் வைப்பார்கள். இதேபோல இதயத்தையும் வெளியே எடுத்து ஊறவைத்து அதை மீண்டும் உடலுக்குள்ளேயே வைத்துவிடுவார்கள். உப்புநீர்க் குளத்தில் தண்ணீர் வற்றியபின் கிடைக்கும் ஒருவித உப்பு நேட்ரன். இது நீர்ச்சத்தை வேகமாக உறிஞ்சக்கூடியது. உள்உறுப்புகளை அகற்றியபின் உருமாறிய உடலுக்கு உரிய தோற்றமளிக்க உப்புக்கலவை வைப்பார்கள். குறித்த காலத்தில் உப்பை அகற்றி அதற்குப்பதில் ஒருவித ரசாயனம் கலந்த துணியை உடலில் உள்ளே செலுத்துவார்கள். இப்பணிக்கு நாற்பது நாட்கள் ஆகிவிடும். இறுதியாக உடலின்மீது மெல்லிய லினன் துணியைச் சுற்றுவார்கள். உடலில் முழுப்பகுதியும் மூடும்படி துணியைச் சுற்றுவார்கள். இவ்வாறு ஏழுமுறை துணிசுற்றுவார்கள். ஒவ்வொருமுறை துணிசுற்றும்போதும் அந்த அடுக்கில் விலைஉயர்ந்த மணிகள், வைரங்கள் வைக்கப்படும். அத்துடன் மம்மியைக் காப்பதற்காக தங்கத்தால் செய்து மந்திரிக்கப்பட்ட தாயத்துக்கள் வைக்கப்படும். இச்சடங்குகள் மொத்தம் 70 நாட்கள் நடைபெறும். அடுத்து, மக்கள் அஞ்சலி செலுத்த வருவார்கள். தலைமை மதகுரு இறுதிச்சடங்குகளைச் செய்து உயிர் ஆதாரமான 9 இடங்களில் மந்திரக்கோல் தொட்டு மம்மிக்கு உயிர்கொடுப்பார். பின்னர், உடலுக்கு வசதிக்கேற்ப தங்கக்கவசம் அணிவித்து தங்கச் சவப்பெட்டியில் வைத்து கல்லறையில் வைப்பார்கள். மன்னர் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் மறுபிறவியில் பயன்படுத்த மம்மியுடன் வைத்து கல்லறை (பிரமிடு) மூடப்படும். 1922இல் திறக்கப்பட்ட ஒரு பிரமிட்டில் தங்கச் சிம்மாசனம், தங்கக் குதிரை (சாரட்) வண்டி, தங்கக் கைத்தடி, தங்கச் செருப்பு என விலைமதிப்பில்லாப் பொக்கிஷங்கள் கிடைத்தன.

"பிரமிடு பொக்கிஷங்களும், மம்மியும்
எப்போதும் ஆச்சரியத்தின் உச்சமே"

ரா.அகில்பிரசாத்
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# விலையில்லா இயற்கையின் அதிசயம்

வெண்ணிலவின் ஒளி வியக்கத்தக்கது

மண்ணின் வாசம் மயக்கத்தக்கது

மேகத்தின் மழைத்துளி விநோதமானது

பூக்களின் நறுமணம் புதுமையானது

பறவைகளின் பாட்டு இனிமையானது

மலையின் மௌனம் அர்த்தமானது

மரத்தின் தென்றல் மென்மையானது

ஆழ்கடல் அமைதி அதிசயமானது

அருவியின் அழகு ஆச்சரியமானது

இருளின் பயம் விசித்திரமானது

விண்ணின் தூரம் விசாலமானது

அன்பின் உறவு அழகானது

இவை அனைத்தையும் உள்ளடக்கிய

இயற்கை புதிரானது மட்டுமல்ல

புனிதமானதும் கூட

போற்றுவோம் இயற்கையை தெய்வமாக

இப்பிறவியில் வாழும்வரை...



எம்.கோபிநாத்
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# வினாடி வினா - தந்தை

1)வரலாற்றின் தந்தை?
ஹெறரடோடஸ்

2)புவியியலின் தந்தை?
தாலமி

3)இயற்பியலின் தந்தை?
நியூட்டன்

4)வேதியியலின் தந்தை?
இராபர்ட் பாயில்

5)கணிப்பொறியின் தந்தை?
சார்லஸ் பாபேஜ்

6)தாவரவியலின் தந்தை?
தியோபிராச்டஸ்

7)விலங்கியலின் தந்தை?
அரிஸ்டாட்டில்

8)பொருளாதாரத்தின் தந்தை?
ஆடம்ஸ்மித்

9)சமூகவியலின் தந்தை?
அகஸ்டஸ் காம்தே

10)அரசியல் அறிவியலின் தந்தை?
அரிஸ்டாட்டில்

11)அரசியல் தத்துவத்தின் தந்தை?
பிளேட்டோ

12)மரபியலின் தந்தை?
கிரிகர் கோகன் மெண்டல்

13)மருத்துவத்தின் தந்தை?
உறிப்போகிறேட்டஸ்

14)ஊேறாமியோபதியின் தந்தை?
சாமுவேல் உறானிமன்

15)ஆயுர்வேதத்தின் தந்தை?
தன்வந்திரி

16)சட்டத்துறையின் தந்தை?
ஜெராமி பென்தம்

17)நோய்த் தடுப்பியலின் தந்தை?
எட்வர்ட் ஜென்னர்

18)சுற்றுச்சூழலியலின் தந்தை?
எர்னஸ்ட் ஹேக்கல்

19)செல்போனின் தந்தை?
மார்டின் கூப்பர்

20)ரயில்வேயின் தந்தை?
ஜார்ஜ் ஸ்டீவன்சன்

21)தொலைபேசியின் தந்தை?
கிரகாம்பெல்

22)இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை?
விக்ரம் சாராபாய்

23)இந்திய ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் தந்தை?
அப்துல்கலாம்

24)இந்தியத் திட்டவியலின் தந்தை?
விஸ்வேஸ்வரய்யா

25)இந்தியப் பொருளாதாரத்தின் தந்தை?
தாதாபாய் நௌரோஜி

26)இந்திய மறுமலர்ச்சியின் தந்தை?
ராஜாராம் மோகன்ராய்

27)இந்தியக் கல்வெட்டியலின் தந்தை?
ஜேம்ஸ் பிரின்சப்

28)இந்திய உள்ளாட்சி அமைப்பின் தந்தை?
ரிப்பன் பிரபு

29)இந்திய ரயில்வேயின் தந்தை?
டல்ஹௌசி பிரபு

30)ஜனநாயகத்தின் தந்தை?
பெரிக்ளிஸ்

31)சுற்றுலாவின் தந்தை?
தாமஸ் குக்

32)இன்டர்நெட்டின் தந்தை?
விண்டேன் சர்ப்

33)மின்னஞ்சலின் தந்தை?
ரேடொமில்சன்

34)அறுவைசிகிச்சையின் தந்தை?
சுஸ்ருதர்

35)கணித அறிவியலின் தந்தை?
பிதாகரஸ்

36)தமிழ்நாடு நூலக இயக்கத்தின் தந்தை?
அவினாசி மகாலிங்கம்

தொகுப்பு : எஸ். வெங்கடேஷ்
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# எம்.என்.சிக்கண்ண செட்டியார் (1883-1945)

திருப்பூர் பல்லடம் சாலையில் உள்ள கணபதிபாளையம் என்ற ஊரில் நஞ்சப்ப செட்டியார் மற்றும் சென்னம்மாள் தம்பதியருக்கு கி.பி.1883இல் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் எம்.என்.சிக்கண்ண செட்டியார். பஞ்ச காலத்தில் பிறந்ததால் தந்தையால் கள்ளிக்காட்டில் வீசி எறியப்பட்டு, தாயின் கருணையால் மீட்டு வரப்பட்ட சிக்கண்ண செட்டியார் பின்னாளில் ஆங்கிலேயர்களால் உயரிய சேவைக்கு என வழங்கப்படும் ராவ்பகதூர் பட்டம் பெற்ற சிறப்புப்பெற்றவர் ஆவார்.

சிக்கண்ண செட்டியார் குடும்பம் கணபதிபாளையத்திலிருந்து திருப்பூருக்கு குடிபெயர்ந்து வந்து ஜவுளி வியாபாரம் செய்தது. அப்பொழுது அவர்கள் வீடுகட்டிக் குடியிருந்த வீதிதான் இன்று சிக்கண்ண செட்டியார் வீதி என்று அழைக்கப்படுகிறது. வியாபாரத்தில் பெரும்நஷ்டம் ஏற்பட்டாலும் விடாமுயற்சியுடன் பிறரிடம் கடன் பெற்று மீண்டும் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி பெரும் முன்னேற்றம் கண்டார். அக்காலத்திலேயே மும்பை வரை சென்று ஜவுளித் தொழில் நுணுக்கங்களைக் கற்றுவந்து அதன்பயனாக திருப்பூரில் முதல் மில்லான தனலட்சுமி மில்லை ஊத்துக்குளி ரோட்டில் துவங்கி சாதனை படைத்தார்.

இவரும் எஸ்.ஆர்.சி. மில் ரங்கசாமி செட்டியாரும் இணைந்து திருப்பூர் மக்களுக்கு பஞ்ச காலத்தில் நபர் ஒருவருக்கு 12 படி ராகி இலவசமாகக் கொடுத்தனர். பின்னர் நெசவாளர்களுக்காக கோவை மாவட்டத்தின் முதல் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராக சிறப்பாகச் செயல்பட்டார்.

சிக்கண்ண செட்டியாரும், அவரது அண்ணன் முருகப்ப செட்டியாரும் இணைந்து 50 ஆயிரம் ரூபாயில் 12 ஏக்கா பரப்பளவில் நஞ்சப்பா உயர்நிலைப்பள்ளியை 1938இல் ஏற்படுத்தி திருப்பூர் மக்களுக்கு கல்விக்கண் திறந்தனர். மேலும் தனது தாயார் பெயரில் சென்னம்மாள் மாணவர் விடுதியும், பொறியியல் மற்றும் நெசவுத் தொழிலுக்கான பயிற்சிக்கூடங்களையும் ஏற்படுத்தினர்.

இத்தகைய தன்னலமற்ற சேவைக்காகத்தான் அன்றைய ஆங்கில அரசு சிக்கண்ண செட்டியாருக்கு ராவ்பகதூர் பட்டம் கொடுத்து கவுரவித்தது. அக்காலத்தில் மிகுந்த செல்வாக்கு மிக்கவராக எங்கு சென்றாலும் ஒரு ராஜாவைப் போல குதிரை பூட்டிய சாரட் வண்டியில்தான் சிக்கண்ண செட்டியார் சென்று வருவாராம். இந்தச் சாரட் வண்டி சமீபகாலம் வரையிலும் தனலட்சுமி மில்லில் இருந்தது.

எம்.என்.சிக்கண்ண செட்டியாருக்கு முருகப்ப செட்டியார், வீரபத்திர செட்டியார், ராமசாமி செட்டியார், பரமசிவம் செட்டியார் என்ற 4 புதல்வர்களும், சீதாலட்சுமி என்ற ஒரு புதல்வியும் வாரிசுகள். சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை நம் கல்லூரிக்காக ரூபாய் 5 லட்சத்தை நன்கொடையாகக் கொடுத்தது.

இதை நினைவுகூறும்பொருட்டே நம் கல்லூரி சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி என்று பெயர் பெற்றது.



எம்.வடிவேலு
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு



## ஒரு மழையின் புலம்பல்



சிறகடிக்கும் பறவை நான் சிறகொடிந்து போனேன் இன்று...
எங்கும் நிரம்பும் நீரோட்டம் நான் கானல் நீராகிப் போனேன்
உனக்கெனப் பொழிந்தேன் அதை நீ மறுத்தது ஏன்?
என் நண்பனை வெட்டிவிட்டு என்னை மட்டும் நேசிப்பது ஏன்?
எனக்கு என் நண்பன் வேண்டும் அப்போதுதான் உருவாக முடியும்
ஆகவே நீ மரங்களை வெட்டுவதை நிறுத்து
மழையை வரச்சொல்லி கைதட்டு...
அதைவிட்டு
யாககுண்டங்கள் வளர்த்தாலும் எத்தனை வேள்விகள் செய்தாலும்
நான் என்ன செய்ய முடியும்
ஆகவே மனிதனே ஒற்றை மரக்கன்றையாவது
உன் வீட்டில் வளர்க்க. உலகத்திற்கு மழையைக் கொடுக்க...

எஸ்.திருமூர்த்தி
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## வாழ்க்கையின் பக்கங்கள்

நம் வாழ்க்கை என்னும் அழகான நாவலில்
ஆதிப் பக்கங்கள் எல்லாம் அன்னையும் தந்தையும் எழுதியது...
கடைசிப் பக்கங்கள் சிலருக்கு அழகான அனுபவம்
சிலருக்கு மனதைக் கிழிக்கும் சோகம்...
ஆனால் நடுவில் கொஞ்சப் பக்கங்கள் மட்டும்
நம் நண்பர்களால் எழுதப்பட்டது
அழகாய் அன்பால் கிறுக்கப்பட்டது

எம்.சதீஷ்குமார்
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## அழிவில்லை



இதயத்தின் அங்கீகாரம் பெற்று
எண்ணத்தில் வேர் ஊன்றி
நம்பிக்கையோடு உழைக்கும் லட்சியங்களுக்கு
என்றும் அழிவில்லை

கே.ஆயிஷா
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# காதலி முகம்

கண்ணாடி நிலவாய் கண்கள் ரெண்டும்
காற்றோடு காதில் கம்மல் ஆட
கருவானில் மழைத்துளி போல்
கன்னக்குழி சிரிப்பழகி...!

வரிகள் இல்லையடி உன்னை நான்வர்ணிக்க
வான்மீன் நீதானோ என்றுநான் வியக்க
வார்த்தையில் இல்லை அழகு உன் பெயரைத் தவிர...!



ம.கோகுல்
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# ஆசிரியர்

ஒரு பூ பூத்து முதிர்ந்து
கீழே விழுவது போல
அப்பூவிற்குள் இருக்கும் விதை
மண்ணில் மறைந்து மரமாகி
பல பூக்களை பூத்துக் குலுங்கச் செய்கிறது
பூ : ஆசிரியர்
விதை : மாணவன் / மாணவி




பொருள் :

ஒரு நன்கு செழித்து வளர்ந்த மரமானது பல பயன்களைத் தரத் தகுந்தவை ஆகும். அதுபோலவே அதன்மூலம் வரும் விதைகள் அனைத்தும் அத்தகைய பண்புகளைக் கொண்டு நற்பயன்களைத் தரத்தக்கவைகள் ஆகும்.

சு.சிவா
இரண்டாம் ஆண்டு இளநிலை வணிக நிர்வாகவியல்

# வாழ்த்துக் கவி

ஏரெடுத்துப் பாடுபடும் வழிவந்த என்னை
ஏடுஎடுத்து வாசிக்க அனுப்பினாள் அன்னை
ஏறெடுத்து எனை நோக்கும் ஆன்றோரே உம்முன்
நற்பேரெடுத்துக் காட்டிடுவேன் ஆனாலும் இது உண்மை

முச்சங்கம் பாலூட்ட முத்தமிழ் தாலாட்ட
பொதிகை செங்கமலமாய் பூத்திருந்து சிரித்திட்டால்
கல் மனதில் கல்லூறும் காவியங்கள் பலபாடும்
இளங்கோவின் சிலம்பொலியோ இதயத்தில் எதிரொலிக்கும்
கம்பனின் காவியமோ கல்லையும் கனியாக்கும்
கலிங்கத்துப் பரணிதனைப் படித்திட்டால் எலிகளும் புலியாகும்

இத்தனை புகழ்மணக்கும் இளமைத் தாயவளின்
இளங்கன்றாய் அவதரிக்க என்ன தவம் செய்தேனோ?
தொட்டுவிடும் தூரம்தான் வானத்து எல்லையென
கற்றுக் கொடுத்த எங்கள் கல்லூரிச் சரணாலயம்
போதி மரம் இங்கில்லை போதிக்க மனிதருண்டு
சாதி மதம் இங்கில்லை சாதிக்க மனிதருண்டு
சத்தியமாக சொல்லுகிறேன் சாதிக்க முடியுமென்று!

இரா.சௌமியா சந்திரபிரபு
மூன்றாம் ஆண்டு இளங்கலை ஆங்கில இலக்கியம்

# பழந்தமிழர்களின் பாரம்பரியக் கலை

பல்வேறு ஆண்டுகளுக்கு முன்னால் பழந்தமிழர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முதன் முதலில் சிலம்பம் என்ற கலையை உருவாக்கினர். பின்பு இந்தச் சிலம்பக்கலை ஒரு வீர விளையாட்டாகவும் கருதப்பட்டது. பின்பு சிலம்பத்தின் உட்பிரிவான வேல்கம்பு, போர் புரிதலின் போது பயன்படுத்தத் தொடங்கப்பட்டது. சிலம்பம் கற்பதனால் மனிதர்களின் மூளை புத்துணர்ச்சி அடைகிறது.

பொதுவாக மனிதர்களின் வலதுபக்க மூளையே அதிக வேலையை மேற்கொள்ளும். ஆனால் இரட்டைக் கம்பு சிலம்பம் விளையாடும் போது இரு மூளைகளுமே சரிபாதி வேலைகளைச் செய்யும். சிலம்பம் விளையாடும் போது மனிதர்களின உடலில் உள்ள தசைகள் நன்கு சுருங்கி விரிவடையும். சிலம்பம் விளையாடுபவர்களுக்கு உடல் வலிமையும் மன வலிமையும் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

சிலம்பம் கற்க கூர்ந்து கவனிக்கும் திறன் தேவை. எனவே குழந்தைகள் இதனைக் கற்கும் போது அவர்களது கூர்ந்து கவனிக்கும் திறன் அதிகரித்து நன்கு படிப்பில் முன்னேற்றம் அடைகின்றனர்.

பழந்தமிழர்களால் உருவான நமது நாட்டின் பாரம்பரிய வீர விளையாட்டான சிலம்பத்தை இப்போது உலக நாடுகள் அனைத்தும் கற்க ஆரம்பித்ததனால் நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. சிலம்ப வீர விளையாட்டானது இப்போது உலக நாடுகள் அனைத்திலும் வளர்ச்சி அடைந்ததைக் கண்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சி அடைய வேண்டும் என்று பள்ளி விளையாட்டுகளில் ஒன்றாக சேர்க்கப்பட்டு, பள்ளி மாணவர்கள் சிலம்பம் கற்பதை ஊக்குவிக்கப்பட்டுள்ளது. ஆண்களைப் போலவே பெண்களும் பெருமளவில் அதிக ஆர்வத்துடன் சிலம்பக்கலையைத் தற்காப்புக் கலையாக கற்றுக் கொண்டு வருகின்றனர்.

நான் பள்ளிப்பருவத்தில் சிலம்பம் கற்று, 2016ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற 3வது ஆசிய சிலம்பப் போட்டியில் பங்கு பெற்று, பரிசு பெற்றவன்.

இப்போது, நான் கற்ற சிலம்பக்கலையை எல்லோரும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு மற்றவர்களுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டுள்ளேன்.

இப்போது நான், திருப்பூர் மாவட்ட சிலம்பாட்டக் கழகத்தின் துணைச் செயலாளராக உள்ளேன்.

M.சந்தீப்
விலங்கியல்



# பெண் கல்வி



தாயாக, மகளாக, தாரமாக
தாதியாக, தோழியாக, தாசியாக
தங்கையாக, தமக்கையாக, தெய்வமாக
யாதுமாகி ஆணுடன் இருப்பவள் பெண்
மார்ச் 8 மட்டும் பெண்ணைப்
போற்றும் சமூகமே
பெண் கல்விக்கு வழிகோலுங்கள்
வீடுதாண்டி வரும் பெண்டிர்
அனைவரும் உங்கள் வீட்டின்
கண்கள் எனக் கொள்ளுங்கள்
பெண்ணிற்குக் கொடுக்கும் கல்வி
வீணெனக் கொள்ளாதீர்
நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு
அதுவே உறுதுணையாகும்
குறையாத செல்வமது கல்வி
பெண்கல்விக்கு வித்திடுங்கள்
பலித்தது பாரதி கனவு
பிழைத்தது பாரதிதாசனின் கவிதை
கொடிகட்டிப் பறக்குது பெரியாரின் கொள்கை
மலையேறிப் போனது மடந்தை பெண் எனும் வழக்கு
தொலைந்து போனது பெண்ணுக்கு சமையலறை தான்
எல்லை எனும் பேச்சு
அழிந்து போனது ஆணுக்கடிமை பெண்ணெனும்
ஆதிக்கமும்
தளர்ந்து போனது பெண்கல்வி குறித்த தவறான
எண்ணங்கள் யாவும்
நொறுங்கிப் போனது அறிவிற்சிறந்தவர் ஆண் மட்டுமே
எனும் கொடுவுரையாடல்
சிதைந்து போனது பெண் பற்றி ஏளனப்பேச்சு எல்லாம்
மடிந்து போனது மங்கை மனை வேலைக்காரி என்பதெல்லாம்
காலம் வந்தது எப்போதும் குனிந்தால் குனிந்தது
வளரட்டும் பெண்ணும் பெண்கல்வியும்...

R.சிவராஜ்
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல

# நட்பு

ஆயிரம் கோடி
நட்சத்திரம்
விண்ணில் இருந்தாலும்
இரவுக்கு அழகு
நிலவு தான்...
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு
நல்ல நட்புதான்...

நட்பு என்பது
நடிப்பல்ல
நாடியின் துடிப்பு

நட்பை நேசிக்கிறேன்
நேசிப்பைக்
காதலிக்கிறேன் !
நண்பன் வெற்றி பெறும்போது
"அவன் என் நண்பன்"
என பெருமை கொள்!!!
தோல்வி அடையும் போது
"நான் உன் நண்பன்"
என அவன் அருகில் நில்




நட்பின் சுவையை
உணர்ந்தேன்...
உன்னிடம் சேர்ந்த பிறகு !
இவ்வுலகம் இறைவன் தந்தது
இனிமையின் உதயம் நட்பு தருவது
இறப்பு வரை நீ இருந்தால்
இழப்பில்லை
இறக்கும் போது நீ இருந்தால்
பயமில்லை
நட்போடு வாழும் வரை மகிழ்வுக்குப்
பஞ்சமில்லை
நட்பு அறியா வாழ்க்கையில்
வாழ்வது அர்த்தமில்லை!




உலகத்தை
நீ
ரசிக்க வேண்டுமானால்
உன்
காதலியோடு இரு
உலகமே
உன்னை
ரசிக்க வேண்டுமனால்
உன்
நண்பனோடு
இரு

அறிமுகமே இல்லாமல் அவசர
அவசரமாய் உன்னிடம் கடன்
வாங்கிய பேனாவில்
தொடங்கியது நம் நட்பு...
புரியாத நட்புக்கு அருகில்
இருந்தாலும் பயனில்லை
புரிந்த நட்புக்குப் பிரிவு
ஒரு தூரமில்லை

G.கார்த்திக்
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# அப்பா



அப்பா என்பது
ஒரு அதிசயமான புத்தகம்
அது கிடைக்கும் வயதில்
நம்மால் அதைப்
புரிந்துகொள்ள முடிவதில்லை
புரிந்துகொள்ள நினைக்கும்போது
அது கிடைப்பதில்லை...

எத்தனை பேர் நான்
இருக்கிறேன்...
என்று சொன்னாலும்
என் அப்பாவின்
இடத்தை யாராலும்
நிரப்ப முடியாது...

நான் எவ்வளவுதான்
கோபப்பட்டாலும்
என்னை
வெறுக்காத ஒரே
ஜீவன்
என் அப்பா மட்டுந்தானே...

அப்பா

கண்களால் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைக்கும் ஒரே உறவு... தந்தை
மட்டுமே...

உன்னை உண்மையாகவே
ராணி போல பார்த்துக்கொள்ள
உன் தந்தையைத் தவிர
வேறு எந்த ஆணாலும்
முடியாது...
தந்தை ஏழையானாலும்
மகள் இளவரசியாகிறாள்
தந்தையின் அருகில்...

து.கிருபாஸ்ரீ
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# நிலா



வான் முகிலின் - சதி
வலைக்குள் -
சிக்குண்ட
சிறைக் கைதி...

## வாழ்க்கைப் பயணம்




இளைஞனே...
தோல்விகளைத் தோளில்
சுமப்பதை விட்டு -
இதயத்தில் சுமக்கலாமா?
இதயத்தில் உள்ள -
சுமையைத் தோளுக்கு - மாற்றி
கடித்தது சிற்றெறும்பென-
தட்டிவிட்டு
தரணி போற்றும் வகையில்
துவக்குங்கள் - உங்கள்
வசந்த வாழ்க்கைப் பயணத்தை...!

## இளைஞனே

காதல் சின்னமாக விளங்க வேண்டியவள்
கண்ணீர் - உன்
சின்னமாக சபித்து விட்டாளா?
நண்பா - நீ
அவளுக்காக எழுதி எழுதித் தீர்த்தவை
வெறும் கவிதையல்ல... உன்
கண்ணீர்ப் புலம்பல்களை... நீ
அவளுக்காக உதிர்த்திட்ட
கண்ணீர்த் துளிகளையெல்லாம்
ஒன்றாக்கியிருப்பேயானால் - இந்நேரம்
இன்னொரு - புதிய நதியாவது
கிடைத்திருக்கும் - நம்
தமிழ்நாட்டிற்கு...




## வரன்

முகிலைத்
துகிலாகக் கொண்டு
ஒயிலாக விளங்கும்
முழு நிலா -
வரனுக்காக
தினம் தினம்
திண்ணையோரம் காத்திருந்து
குறை நிலவாய் மாறும்
பெண் நிலா!



முனைவர் சு.பொன்னையன்
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

# கதறும் பாரதம்

*சாதி...
மதம்...
இனம்...
மொழி...
வயது... என
வித்தியாசம் பாராமல்
தழுவியது "கொரோனா வைரஸ்"

*பரிணாம
வளர்ச்சி...
வளர்ந்தது ...
வைரஸ்... மட்டும்...

*தளர்வுகளும்
கட்டுப்பாடுகளும்...
முடிவா??...
ஆரம்பமா??
புரியாமல் திணறும்
நடுத்தர வர்க்கம்...

*கட்டுப்பாடுகள்
கடமைகளாயின...
தட்டுப்பாடுகள்...
தாராளமாயின...

*சுவாசமின்றி...
துடிக்கும்...
இதயங்கள்...

*மலிவாய்...
போனது...
மனித உயிர்கள்...

*அணையாது
எரியும்...
மயானங்கள்...
தடம்... மாறி
தடுமாறி...
நிற்கிறது
"டிஜிட்டல் இந்தியா"



*அலைகளுக்குள்
சிக்கித் தவிக்கிறது
இந்தியப் பொருளாதாரம்...

*மனிதக் கடவுள்கள்...
மன்றாடுகின்றது... வைரசோடு...
இரவு... பகல்
பாராது...
போராடுகிறது...
தாங்குமா...?? நாளை...
தவிப்புகளோடு... மருத்துவம்...

முனைவர் இரா.சங்கர்
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை

# மனித நேயம்

மக்கள்
நலம் காக்க...
தன்
காரை விற்று...
சுவாசக் காற்றை
வாங்கினான்
கலியுகக் கர்ணன்
"சானாவாஸ் சேக்"



# நட்பு

அடித்தால்...
வலிக்கவில்லை...
நடித்தால்...
வலிக்கிறது...



# சிரிக்க மட்டும்

Mute என்ப Unmute என்ப இவ்விரண்டும்
உயிர்மூச்சென்ப Online வகுப்பிற்கு.

Datacard இன்றி அமையாது Android Phone யார்யார்க்கும்
Recharge இன்றி அமையாது Online வகுப்பு.




முனைவர் இரா.சங்கர்
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை

# நட்பு

நண்பா உன்னை நினைத்து
நான் சிரிக்க வா
இல்லை உன்னுடன்
நான் இருந்த நினைவை
நினைக்கவா

நான் பேசாமல் நடந்தாலும்
அக்கம்-பக்கம் இருப்பவர்களைப்
பார்த்து அவர்களின் மனம்
வருந்தாத படி
என்னிடம் அவர்களைப் பற்றிக்
கேலி செய்வாய்
டீக்கடைக்குச் சென்றாலும்
என்னிடம் பணம் இல்லாத
நிலையை அறிந்து
நீயே பணத்தைக் கொடுக்க முந்துவாய்



கல்லூரிப் பெண்
தேவதைகளைக் கண்டு காதல்
கதையைப் பேசினோம்
பின்பு நண்பர்களுக்குள் சண்டை
வந்தால் வயிறு வலிக்க
கண்ணில் நீர் வர
சிரித்துக் கொண்டே சண்டை மூட்டுவோம்!

புதுப்புது திரைப்படங்கள்
வெளிவர இருக்கையில்
கல்லூரிக்குச் செல்லாமல்
சினிமா பார்க்கச் சென்றோம்
நேரத்தினைக் கழித்தோம்
கல்லூரி காலங்களில்
நாட்களை வீணாக்கினோம்




உணவு அருந்தினோமோ இல்லையோ
பசி எடுக்காத அளவிற்குச்
சிரித்துக் கொண்டே கேலி பேசினோம்

உறவுகளிலும்
பழக்க வழக்கங்களிலும் யார்
யாரோ வந்து செல்கின்றனர்
ஆனால் அவர்களில் யாரிடமும்
உன் அன்பை எதிர்பார்க்க
முடியவில்லை
ஏமாற்றமே!
நினைக்கையில் கண்ணில்
கண்ணீர் வருகிறது
வருந்துகிறேன்

மூன்று வருடம் ஒன்றாகப்
படித்தோம் இப்போது
ஒரு நாள் உன்னைப் பார்க்க
முடியுமா என்று ஏங்குகிறேன்
நண்பா
நான் தோற்று தலை
குனியும் போதெல்லாம்
நீ எனக்குப் பணம் காசு
கொடுத்தாயோ இல்லையோ
ஆனால் என்னை
வயிறுகுலுங்கச் சிரிக்க
வைத்தாய்
நண்பா
நினைத்துப் பார்க்கிறேன்

R.சின்ராசு
முதலாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

# கொரோனா கவிதைகள்

வெள்ளையணுக்களின்
தடுப்பாற்றலுக்கு
வேட்டு வைத்த சகுனியே!

எங்களின் நுரையீரலுக்குள்
நுழைய எத்தனிக்கும்
எல்லை தாண்டிய பயங்கரவாதியே!
மனிதகுலத்தையழிக்க வந்த
கொடிய நுண்தொற்றே!

எங்கள் விஞ்ஞான வளர்ச்சியிலே
விரும்பத்தகாத விருந்தாளியே!
நாகரீகத்தின் நாயகர்கள் நாங்கள்
நச்சுயிரி நீ எம்மாத்திரம்

அடிமைச்சங்கிலியிட்டாயென்று
ஆணவம் கொள்ளாதே
அன்புச்சங்கிலியிலே
பிணைந்துள்ளோம்
சிந்தையிலே
வாயடைத்து தனிமையுற்றோம்
உண்மையே
ஒன்றுபட்டே வெல்வோம்
உன்னையே;

கொடூரத் தொற்றே
கொக்கரிக்காதே!
உன்னைக் கூண்டோடொழித்தே
குலவையிடுவோம்
நினைவில் வை
உன்னையும் கடப்போம்
நாங்கள்... மகத்தான மானுடர்கள்






மக்களைக் காக்கும் மக்களே
வாழ்க என்று வாழ்கவே
சுமந்து பெற்றவள் எங்கள் தாய்
இன்று உயிரைக் காப்பவள் செவிலித்தாய்
விண்வெளி உடையணிந்தாய்
விரைந்து பணி செய்தாய்
மக்களைக் காக்கும் இவள் புனிதத் தாய்
வாழ்க என்றும் வாழ்கவே!

தன்னையே அர்ப்பணம் செய்து
மருத்துவம் செய்யும் மருத்துவரே
நீயும் ஓர் தாய்க்கு மகனல்லவா
எம் பிள்ளைகள் வணங்கும் உனையல்லவா
வாழ்க என்றும் வாழ்கவே!

மக்களைக் காக்கும் மகேசனே
நெருப்பு வெயிலிலே பொறுப்பாய் நிற்பவரே
முதலில் அன்பாய் சொன்னவரே
அறிந்து வருபவரை அதிர விரட்டிக் காத்தவரே
வாழ்க என்றும் வாழ்கவே
மக்களைக் காக்கும் காவலரே!

ஊரடங்கில் ஊரைச் சுத்தம் செய்தவரே
நீல உடையில் சாக்கடையை சரி செய்தவரே
நீங்கள் தொழிலாளியல்ல தூய்மைத் தொண்டர்கள்
வாழ்க என்றும் வாழ்கவே
மக்களைக் காக்கும் பெருந்தெய்வமே
அன்பும் அறமும் தாழ்ந்து விடாது
இனி கொரோனா கிருமி வாழ்ந்து விடாது

S.பிருந்தா
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# அம்மா

இது கவிதை அல்ல
என் கனவுகளால் கோர்த்த மாலை
என் ஆசைகள் எல்லாம் என்ன தெரியுமா?
கொட்டும் மழையில் ஒரே குடையில்
உன் தோள் உரசி நடக்க ஆசை
உன் சுட்டு விரல் பிடித்து
உன் பாதம் தொடர ஆசை
உன் கால் நகம் வெட்டி விட
உன் கையில் மருதாணி வைத்து விட ஆசை
உனக்காய் ஒரு கவிதை நான் எழுதி
அதை நீ வாசிக்க நான் கேட்க ஆசை
உன் கைக்குட்டை திருட ஆசை
அதை என் கைப்பையில் எப்போதும் வைத்திருக்க ஆசை



உனக்காகக் காத்திருக்க ஆசை
காலதாமதமாய் வரும் நீ
என் மன்னிப்புக்கு கைகட்டி நிற்க ஆசை
நீ சொல்லும் சின்னச் சின்ன பொய்கள் எப்போதும் கேட்க ஆசை
நமக்குள் சின்னச் சின்னதாய் வரும்
சண்டைகள் ஆசை
அந்தச் சண்டைக்குப் பின்வரும் சமாதானம் ஆசையோ ஆசை

உன் விரல் தொடும் மல்லிகைப் பூ
தலை சூட ஆசை
உன் விழி சொல்லும் கவிதை
வாசித்துப் பார்க்க ஆசை
மலைப்பாம்பாய் நீள்கின்ற
தார்ச்சாலையில் உன்னோடு
ஒரு மிதிவண்டி பயணம் போக ஆசை
நீ குடித்த பாதி தேநீர்
ருசி பார்க்க ஆசை

பவுர்ணமி இரவில் மொட்டை மாடியில்
உன்னோடு நிலாச்சோறு உண்ண ஆசை
சின்னஞ்சிறு கதைகள் பேசி
உன் மடியில் குழந்தை போல துயில ஆசை
வாழ்கிற காலம் எல்லாம் உன்னோடு வாழ ஆசை
சாகின்ற போது மட்டும்
நான் மட்டும் சாக ஆசை...

S.அனுசிரியா
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# ஆணுக்குப் பெண் அடிமையா?



*ஆணுக்குப் பெண் அடிமையா?
படைத்தவன் செய்த
கொடுமையா?

*உடலிலும் வேறுபாடு
உரிமையிலும் வேறுபாடு-இதுதான்
நிதர்சன உண்மையா?

*பெண்களை அழகாயப் படைத்தது
ஆண்களுக்கு
அடிமையாக்குவதற்கா?

*பெண்ணின் கருவறையிலேயே உதித்து
பெண்களையே சீரழிப்பதுதான்
ஆண்களின் பெருமையா?

*பெண்கள் அமைதியாய் இருப்பதால்
ஆண்கள் ஆணவம் கொள்கிறீர்கள்
பெண்கள் அகிம்சையாய் இருப்பதாலோ
ஆண்கள் அநீதி இழைக்கிறீர்கள்?

*பெண்களே இனி
துணி உடுத்தும் போதே
துணிவையும் சேர்த்து உடுத்துங்கள்
துன்பம் எது வந்தாலும்
துடைத்து எறிந்து விடுங்கள்

*அமைதியாய் இருந்தது போதும்
ஆசைக்காக அழைக்கிறவனை
அறுத்து எறியுங்கள்

*ஆணின் மலட்டுப் புத்திக்கு
ஆளாகாமல் மகாகாளியாய்
உருவெடுங்கள்!

*காதல் எனும் வேள்வியினால்
கலங்கி நிற்காதீர்கள்!
கயவர்கள் நிறைய உண்டு
கருத்தாய் இருந்து கொள்ளுங்கள்!...

ப.விஜயராஜ்
முதலாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

# உரிமைக் குரல்

சிறுகதையின் நாயகன் நளன் 23 வயது பட்டதாரி. நளன் தனது சிறுவயது முதலே பலதரப்பட்ட சமூக சேவைகளில் பணியாற்றிக் குரல் கொடுத்தவன். அவனது கிராமத்தில் நடந்த நிகழ்வே இச்சிறுகதை. நளன் நகரத்தில் படித்து முடித்து விட்டு கிராமத்திற்குச் சென்ற இளைஞன். இவன் கிராமத்தின் நிலையை உயர்த்த அரசு அலுவலகங்களை நாடி வந்தான். காரணம் அடிப்படை வசதி அற்ற கிராம மக்களின் நிலை உயர முயற்சி மேற்கொண்டான். பல நாட்கள் அரசு அலுவலர்களை நாடியும் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் கிராம மக்களின் துணையோடு போராட்டம் நடத்தினான். இப்போராட்டத்தில் அருகிலிருக்கும் கிராம மக்களும் ஒன்றிணைய, தீர்வு காண வழி ஏற்பட்டது. இந்திய ஜனநாயக நாட்டின் தனது அடிப்படைத் தேவையை அடைய அனைவரும் ஒன்று சேர்ந்து உரிமைக் குரல் கொடுக்க வேண்டும். நளனின் சமுதாய நலன் பின்னடைவில் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. தொடக்கம் என்பது நம்மிடமிருந்து தொடங்க வேண்டும். கிராமங்களே இந்தியாவின் முதுகெலும்பு. அதனைச் சரிவரப் பாதுகாத்து தனியார் வசம் செல்லாமல் பார்த்துக் கொள்வது இந்திய மக்களின் தலையாய கடமையாகும்.

கிராமங்களை ஆதரிப்போம் சமுதாய நலன் காப்போம்...

சி.சரண்
முதலாம் ஆண்டு முதுகலை வணிகவியல்

# கொரோனா

ஏன் வந்தாய்?
எதற்காக வந்தாய்?
சீனாவில் பிறந்து
பாரெங்கும் உன் குடும்பத்தைப்
பரவச் செய்தாய்...
மனிதர்கள் மனதில் மனித நேயம் மறந்து விட்டது என்று
நினைவுறுத்த வந்தாயோ?
அன்னையின் அன்பையும்
தந்தையின் பாசத்தையும்
உறவுகளின் நேசத்தையும்
ஆசானின் கற்றறிவையும
கற்பிக்க வந்தாயோ?
ஏன் வந்தாய் பூமிக்கு?
சாதி மத பேதமில்லாமல்
ஏழை பணக்காரர் பாகுபாடுமில்லாமல்
ஆயிரங்கோடி உயிர்களை
மரித்துக் கொண்டிருக்கிறாய்
இன்னும் எத்தனை கோடி உயிர்களை
வேட்டையாட காத்துக் கொண்டிருக்கிறாய்?
என்று தணியும் உன் தாகம்?
விழாக்களை எல்லாம் நிறுத்தி
கோவில் வாசலையே பூட்டி
கடவுளுக்கே முகக் கவசம்
அணிய வைத்தாயே?
தனிமனித இடைவெளியால்
சுய ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுத்தாய்...
முகக் கவசம்
உயிர்க்கவசம் ஆனது இன்று...

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை அன்று...
கூடி வாழ்ந்தால் கோடி உயிர் போகும் இன்று...
பள்ளிகளை மூட வைத்தாய்
பாடங்களை மறக்க வைத்தாய்
கல்லூரி வாசலுக்குச் செல்லாமல் ஆசிரியர்
அருகில் இல்லாமல் கைப்பேசியில் கல்வி இன்று...
உயிரைக் காக்கும்
மருத்துவர்களையும்
பாதுகாப்பு அளிக்கும்
காவலர்களையும்
சுகாதாரத் தூய்மை தரும்
சுகாதாரப் பணியாளர்களையும்
சிரம் தாழ்த்தி
கையெடுத்து வணங்கி நிற்கிறோம்
நன்மைகள் பல புரிந்தாலும்
தீமைகள் நிறைய எங்கள் கண் முன்னில்...
சென்று விடு கொரோனா...
உலகை விட்டு..
மறைந்து விடு கொரோனா
மண்ணை விட்டு...
அழிந்து விடு கொரோனா
பூமியை விட்டு..

விரைவில் உன் அழிவை
எதிர்நோக்கி காத்திருக்கும்...
உன் வருகையால்
பல உறவுகளை இழந்து
நித்தம் பயத்துடன் வாழும்
கண்ணீர் இதயங்கள்...

திருமதி.ச.பூங்கொடி
தற்காலிகப் பணி, பன்னாட்டு வணிகவியல் துறை

# கருத்து துணுக்குகள்

தாழ்வு மனப்பான்மையைத் தூக்கி கடலில்
போடுங்கள், ஏதேனும் தவறு, தோல்வி
நடந்தால் அதற்குரிய காரணத்தை ஆராய
வேண்டுமே தவிர... நத்தை ஓட்டுக்குள்
முடக்கி விடக்கூடாது...

கடந்த காலச் சிந்தனைகளிலேயே மூழ்கி
வாடாதீர்கள். நிகழ் காலத்தின்
நிஜங்களில் வாழுங்கள். எதிர்காலத்தை
நம்பிக்கையாக எதிர்கொள்ளுங்கள்

விஷத் தண்ணீர் ஊற்றினால்
ஆனந்தப் பூக்கள் மலராது. எனவே
குறை கூறுவது, பிறரை நோகடிப்பது
என தேவையற்ற செயல்களை
விட்டுத் தள்ளுங்கள்
அடுத்தவர்கள் என்ன செய்வார்கள்
என்பதை விட்டுத் தள்ளுங்கள்
அடுத்தவர்களுக்காக வாழும் வாழ்க்கை
அட்ஜஸ்ட் செய்யப்பட்ட வாழ்க்கை
உங்களுக்காக நீங்கள் வாழும் வாழ்க்கைதான்
ஆனந்தமான வாழ்க்கை
பிரச்சனைகளை நினைத்துக்
கொண்டிருக்காமல், முடிவுகளை நோக்கி
கவனம் செலுத்துங்கள். சில பிரச்சனைகள்
கழுதை சுமக்கும் பொதியைப் போன்றது
இறக்கி வைத்துவிட்டு நடையைக் கட்டுங்கள்

# மறந்து போன கலாச்சாரம்

அன்று...
தூசி பறக்கும் காற்றில்... ஆர்வம்
கொண்டு பல வீர விளையாட்டுகளை
விளையாடி ஆயுளை உயர்த்திக் கொண்டிருந்தார்கள்...
ஆனால், இன்று...
ஏசி பரவும் வீட்டில்...
ப்ரீபையர், பப்ஜி போன்ற விளையாட்டுகளை
வீர விளையாட்டு என நினைத்துக் கொண்டு
வாழ்க்கையைக் கடந்து கொண்டிருக்கிறோம்
அன்று...
சேவல் கூவும் வேளையில்
பசுமை நிறைந்த காலையில்... வியர்வை
சிந்தி உழைத்தார்கள்...
ஆனால், இன்று...
கடிகாரத்தில் நேரத்தைக் குறித்துக்
கொண்டு... உணர்வுகளைத் தொலைத்துக்
கொண்டு... ஏசி அறையில்
பரபரப்பாய் ஏனோ இயங்கிக் கொண்டிருக்கிறோம்...
காலம் கடந்து போனதால்...
கலாச்சாரமும் மறந்து போனதோ நம் மக்களுக்கு...



த.யுவஸ்ரீ
முதலாம் ஆண்டு இளம் வணிகவியல

# நீரின் முக்கியத்துவம்

தூய நீருக்கு உருவமும், வடிவமும் கிடையாது. அதே போன்றே, இதற்கு எந்தவித சுவையும், மணமும், நிறமும் கிடையாது. காற்றுக்குப் பிறகு நம் உடலுக்கு மிகவும் அவசியமானது நீர்தான். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் இன்றியமையாது உயிர்நாடியாக விளங்குவது தண்ணீர்.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு

எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழ முடியாது. அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது. "நீரின்றி அமையாது உலகு" என்ற வள்ளுவர் வாக்கில் புதைந்திருக்கும் உண்மையை இவ்வுலகில் ஜீவித்த உயிர்கள் யாவும் உணரும். மூன்றாம் உலகப் போரே உதிக்கலாம் என்கிற சூழ்நிலையைக் கூட உருவாக்கும் அளவு நீரின் தேவை உலகை வியாபித்திருக்கிறது.

நீரற்ற உலகை ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள். தாகத்துக்கு ஏங்கியபடி ஜீவராசிகள் அலைந்து கொண்டிருக்கும். எல்லா நீர்நிலைகளிலும் எத்தனை கூழாங்கற்கள் இருக்கின்றன என்பதைச் சுலபமாக எண்ணி விடலாம். கடல் பகுதிகள் அத்தனையும் பொட்டல் வெளிகளாக காட்சிதரும்.

நீர் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. நீரில்லாமல் எந்த உயிரினமும் இப்புவியில் வாழ இயலாது. நீரின் மூலங்கள் பல. நாம் நீரை ஆறு, ஏரி, குளம், நதி போன்றவற்றிலிருந்து பெறுகிறோம். இப்பூமியின் எழுபது சதவீதம் நீரால் ஆனது என அறிவியல் கூறுகின்றது. மேலும், நம் உடலின் பெரும்பகுதி நீரால் ஆனது. நீர் மனிதர்களுக்கு மட்டுமில்லாமல் பிராணிகள், தாவரங்கள் உயிர் வாழவும் அடிப்படையாக அமைகின்றது.

நீர் மனித வாழ்வின் அன்றாடத் தேவைகளில் மிக அடிப்படையானது. மனிதர்களுக்குக் குளிக்க, சமைக்க, பாத்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றைக் கழுவ நீர் இன்றியமையாததாக அமைகிறது. மேலும், மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ தினமும் நீரை அதிகளவில் பருக வேண்டுமென்று மருத்துவம் கூறுகிறது. தினசரி ஒரு குறிப்பிட்ட அளவு நீரைப் பருகும் ஒருவனது உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

இது மட்டுமில்லாமல், விவசாயத்திற்கும் நீர் இன்றியமையாததாக இருக்கின்றது. நீர் இல்லாமல் வறண்ட நிலங்களில் விவசாயம் என்பது எட்டாத கனிதான். எனவேதான், வாய்க்கால் வெட்டி, அணைகட்டி விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் செய்கின்றனர். மழை பொய்த்து, நீர் இல்லாமல் விவசாயிகள் அல்லல்படும்போது, அது அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இதற்காகத்தான், அரசாங்கங்கள் நீர்ப்பாசனத் துறையை ஏற்படுத்தி விவசாயத்திற்கு எப்போதும் நீர் இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன.

மின்சார உற்பத்திக்கும் நீரே காரணமாய் அமைகிறது. வேகமாக ஓடும் நதிகளில் அணைக்கட்டுகளைக் கட்டி, அதிலிருந்து அதிக சக்தியுள்ள மின்சாரத்தை எடுக்கின்றனர். இதுவே, மிக எளிய முறையாகவும், சிக்கனமான தாகவும் கருதப்படுகிறது. இன்றைய நவீனஉலகில் மின்சாரம் இல்லையென்றால் என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது அல்லவா! இதற்கு நீர் தானே காரணமாய் அமைகிறது.

பண்டைய காலந்தொட்டு இன்றைய காலம் வரைக்கும் போக்குவரத்துக்கு நீர் பெரும்பங்காற்றுகிறது. சாலை வசதிகளும், இரயில் தண்டவாள வசதிகளும் இல்லாத பல இடங்களில் இன்னும் ஆறுகளே முக்கியப் போக்கு வரத்து ஊடகங்களாக விளங்குகின்றன. அதிகளவில் மிகச் சிக்கனமான முறையில் பொருள்களைக் கொண்டு செல்ல கடல் போக்குவரத்தே இன்றும் பெரிதும் விரும்பப்படுகிறது.

உலகம் முழுவதும் நிலத்தடி நீர் மிகவும் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் குறைவதால் பலவழிகளில பாதிப்பு ஏற்படுகிறது. பருவ மாற்றம் வானிலை மாற்றத்தின் கட்டமைப்பையே மாற்றிவிட்டது. இந்தியாவில் தண்ணீர்ப் பற்றாக்குறையின் அவலம் தீவிரமாகி வருகிறது. ஆனால் இவை அனைத்தையும் ஒவ்வொரு தனி மனிதனின் முயற்சியால் சரி செய்ய முடியும். தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கிச் சிறப்பான முறையில் நிர்வகிக்க முடியும்.

நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தும் மிகப் பெரிய சமூகம் இந்தியா தான். குறிப்பாக கிராமங்கள், குக்கிராமங்களில் உள்ள மக்களுக்கு நிலத்தடி நீர்தான் வாழ்வாதாரம். அவர்கள் இந்த நீரைக் கட்டுப்பாடின்றி சுதந்திரமாகப் பயன்படுத்தவும் வழிவகுத்துள்ளனர். இந்த திட்டமற்ற தொடர்ச்சியான பயன்பாடு நிலத்தடி நீரையும குறைத்துவிட்டது. இந்தத் தண்ணீர் குறைபாடு மக்களின் தேவைகளுக்காக மட்டுமன்றி மண் வளத்தையும் பாதிக்கிறது. விவசாயத்தையும் பாதிக்கிறது.

நமது வருங்காலச் சந்ததி எப்பாடு பட்டால் நமக்கென்ன, நாம் இருந்து பார்க்கவா போகிறோம் என்ற எண்ணம் நமக்கு. இப்படி நமது முன்னோர் நினைத்திருந்தால் நாம் துன்பத்திற்கு ஆளாகியிருப்போம். மனிதர்களின் ஏகோபித்த விருப்பம் பணம், பகட்டு, புகழ் மட்டுமாகவே உள்ளது. நமது சந்ததிக்குப் பணத்தைச் சேர்த்து வைத்தால் போதும் என்ற எண்ணமும் உள்ளது. பணத்தால் எல்லாவற்றையும் வாங்கலாம் என்பது எந்தக் காலத்திலும் சாத்தியமில்லை. இதை உணர்ந்து வருங்காலச் சந்ததிக்கு இயற்கையை முழுமையாக விட்டுச்செல்வது நமது தலையாய கடமை.

எனவே, நீர் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஒன்றாகக் கலந்து விட்டது என்று கூறினாலும் அது மிகையாகாது. நீரில்லாமல் எந்த உயிரினமும் இப்பூமியில் வாழ்வது என்பது இயலாத காரியம். இதனால் வேளாண் உற்பத்தி குறைகிறது. எனவே நிலத்தடி நீரைப் பராமரித்து அவற்றை முறையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பருவக் கால மழையின்போதும் அந்த நீரைச் சேமிக்க கட்டமைப்புகளை வகுக்க வேண்டும்.

அதை விடவும் முக்கியம். இயற்கையைப் பாதுகாக்க இளந்தலைமுறைக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம். எனவே மனிதர்களான நாம் அனைவரும் சிறிது நேரம் ஒதுக்கி மரம் வளர்ப்போம். மழை பெறுவோம். நீரை சேமிப்போம்.

முனைவர் இரா.சங்கர்
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை



# நாட்டு நலப்பணித் திட்டமும் நானும் - ஓர் அனுபவம்

கல்லூரி வாழ்க்கை ஓர் அழகிய தருணம். ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தோம் வளர்ந்தோம் என்றில்லாமல் நம்மை வாழவைக்கும் சமுதாயத்திற்கும், நமக்கு கல்வியும் ஒழுக்கமும் கற்றுத் தரும் கல்லூரிக்கும் ஏதாவது நன்மை செய்ய வேண்டும். அப்படி நான் எனது சேவையைச் செய்யக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்புதான் எனது கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு-2.

தொடக்கத்தில் கல்லூரி வருவதற்கும் பிறரிடம் பேசுவதற்குமே தயங்கிய எனக்குள் ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கி கல்லூரியிலும் சமுதாயத்திலும் எனக்கென ஒரு அடையாளத்தை ஏற்படுத்தித்தந்தது நாட்டு நலப்பணித் திட்டம் அலகு-2. எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்ற எண்ணற்ற நம் கல்லூரி மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் பல வாய்ப்புகளையும் உருவாக்கி தந்தது அலகு-2.

இந்த உலகத்தில் எதன் மீது வேண்டுமானாலும் காதல் வரலாம். ஆனால் எங்களுக்கு இயற்கை மற்றும் மரங்கள் மீதுதான் காதல். இயற்கையின் மீது நாங்கள் கொண்ட காதலின் வெளிப்பாடுதான் கல்லூரியில் நாங்கள் நடவு செய்து பராமரித்து வரும் 2500க்கும் மேற்பட்ட மரங்கள், பசுமை நாயகன் அப்துல் கலாம் ஐயா நினைவாக கலாம் கனவுப் பூங்கா, திருப்பூர் குமரன் நினைவாக திருப்பூர் குமரன் நினைவுப் பூங்கா, நம்மாழ்வார் மூலிகைத் தோட்டம், விவேகானந்தர் பசுமைப் பூங்கா எனப் பல பூங்காக்களை உருவாக்கி எண்ணற்ற மரங்களை இன்று வரை தண்ணீர் ஊற்றிப் பராமரித்து வருகிறோம். நாங்கள் கல்லூரியில் படிக்கின்ற நேரம் போக மீதமுள்ள நேரங்களை நாங்கள் வளர்க்கும் மரங்களுடன்தான் செலவிடுவோம். எங்கள் மன அமைதிக்கு மாமருந்தாக இருப்பது அந்த மரங்கள்தான். அதைப்போல் நாங்கள் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் என்.எஸ்.எஸ். குளம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். அதுவே இன்று கல்லூரிக்கு நீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. எனக்கு நமது கல்லூரியும், நாட்டு நலப்பணித் திட்டமும், தேசிய ஒருமைப்பாட்டு முகாம், கஜா புயல் பேரிடர் காலத்தில் களப்பணி, கிராமப்புறங்களில் சேவை என எண்ணற்ற வாய்ப்புகளையும், அனுபவங்களையும் வழங்கியுள்ளது. அதுமட்டுமின்றி, கல்லூரியில் பல விழிப்புணர்வு நிகழ்வுகளையும், தூய்மைப் பணிகளையும் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி சேவை உணர்வோடு தொடர்ந்து செய்து வருகிறோம். கொரோனா ஊரடங்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் எங்கள் சேவை செய்யும் எண்ணத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஊரடங்கிலும் உறங்காமல் இன்று வரை தன்னலம் கருதாமல் தொடர்ந்து களப்பணியாற்றி வருகிறோம்.

நாங்கள் கல்லூரியை விட்டுச் சென்ற பின்பும் காலம் கடந்து நாங்கள் வளர்த்த மரங்கள் எங்கள் பெயர் சொல்லும். நாங்கள் செய்த உணர்வுப் பூர்வமான சேவை என்றுமே நிலைத்து நிற்கும்.

இன்று நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி அலுவலகம், காவல் துறை அலுவலகங்கள் என எங்கு சென்றாலும் பல உயர் அதிகாரிகளுக்கு என்னை நன்றாக அடையாளம் தெரியும். அதற்கு ஒரே காரணம் நாட்டு நலப்பணித் திட்டம் அலகு-2 மட்டுமே. அதில் நான் செய்த உண்மையான சேவையே எனக்கு இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உலகை விட்டுச் செல்லும் பொழுது நாம் எதையும் எடுத்துச் செல்ல முடியாது. கடைசி வரை நம்முடன் வருவது நம் சேவை மட்டுமே. அதனால் அப்துல் கலாம் ஐயாவின் வழியைப் பின்பற்றி நாம் வாழும் வரை நம்மால் முடிந்த சேவையை நாட்டிற்காகச் செய்வோம்.

எதையும் எதிர்பார்த்து சேவை செய்யாதே... நீ எதிர்பார்க்காத ஒன்றை உன் சேவை உனக்காகச் செய்யும்........

B.சந்தோஷ்
மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி அறிவியல்

# தொலைத்த உறவுகள்

சுட்டெரிக்கும் பாலைவன வெயில் அதைக் குறைக்கும் வகையில் விமானத்தின் ஏ.சி.. காற்று அதிலும் வியர்க்கும் வகையில் ஒரு 40 வயது மனிதர் 15 வருடங்கள் சொந்த ஊரிலிருந்து கட்டின மனைவி மகளிடமிருந்து தாய், தந்தையிடமிருந்து பிரிந்து உழைத்துச் சம்பாதித்த பணத்தோடு மீண்டும் சவுதி அரேபியாவிலிருந்து தாயகம் திரும்பும் அவரின் பெயர் கேசவன். ஆனால் வழக்கத்திற்கு மாறாக அவர் முகத்தில் சந்தோசம் துளியும் இல்லாமல் கலங்கிய கண்களோடும், பதட்டமான மனநிலையோடும் அந்த பயணத்தை மேற்கொள்கிறார். ஏனெனில் தன்னைப் பெற்று வளர்த்த தன் தந்தை மரணப் படுக்கையில் இருக்கும் வேளையில் எந்த மகனுக்குத்தான் நெஞ்சம் பதை பதைக்காது. இலட்சம் இலட்சமாக சம்பாதித்த போதிலும் தன் தந்தை முகத்தை மரணத்திற்கு முன் ஒரு முறையாவது பார்க்க முடியாதா என்ற ஏக்கத்தோடும், தன் தந்தையுடன் இருந்த அழகான தருணங்களை எண்ணியபடியே கலங்கிய வண்ணம் தன் சொந்த ஊரான மதுரைக்கு வந்தடைகிறார். ஒரு டாக்ஸி பிடித்து தன் வீட்டை நோக்கி விரைந்து கொண்டுள்ளார். செல்லும் வழியில் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில், அதைப் பார்த்த உடன் 30 வருடங்களுக்கு முன் தன் தந்தையின் கைகளைப் பற்றியபடியே திருவிழாவில் கலந்து கொண்டதும், தந்தையுடன் இருசக்கர வாகனத்தில் சென்றதும், அனைத்தும் ஞாபகத்திற்கு வருகிறது. டாக்ஸி வீட்டை வந்தடைந்து பதட்டத்துடன் டாக்ஸியை விட்டு இறங்குகிறான். வீட்டின் முன் உறவினர்கள் கூட்டம், உறவினர்களைக் கடந்து வீட்டினுள் செல்கிறான். தன் தந்தையின் உடல் உயிர் பிரிந்த நிலையில் நடு வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. கேசவனின் தாய் அந்த உடலின் கால் பகுதியைப் பற்றியபடி அழுதுகொண்டிருக்க, கேசவனின் மனைவியும், மகளும், கேசவனைக் கட்டித்தழுவி கதறுகிறார்கள். இவர்களுக்கு மத்தியில் கேசவன் ஒற்றை வார்த்தை கூட பேசாமல் தன் தந்தையின் உடலைக் கட்டியணைத்து நெற்றியில் முத்தமிடுகிறான். தான் சம்பாதித்த அனைத்து இலட்சங்களின் மூலமாகவும், தன் தந்தையின் உயிரைத் திரும்பக் கொண்டு வர இயலாததை உணர்கிறான். இதைப் போல் எண்ணற்ற கேசவன்கள் சொந்த நாட்டை, குடும்பத்தை விட்டு, "தொலைத்த உறவுகள்" ஏராளம். இதற்கு என்ன காரணம், சொந்த நாட்டில் ஒரு நல்ல வருமானத்துடன் ஒரு வேலை வாய்ப்பு கூடவா இல்லை...!

S.A.சித்திக் அகமது
முதலாம் ஆண்டு இளம் வணிகவியல்

# கொரோனா

உலகெங்கும் பரவி வரும், அச்சுறுத்தி வரும் வைரஸ் தொற்று. இத்தொற்றால் பல லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

## தோற்றம்

சீனாவின் வுஹானில் 2019ஆம் வருடம் நவம்பர் 17இல் கண்டறியப்பட்டது.

## வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பது

- வெளியே செல்லும் பொழுது முகக்கவசம் அணிதல்
- அடிக்கடி கைகளை சோப்புப் போட்டுக் கழுவுதல்
- சத்தான உணவுகளை அதிகம் உண்ணுதல்

## தொற்றின் அறிகுறிகள்

### பொதுவான அறிகுறிகள்

- காய்ச்சல்
- வறட்டு இருமல
- சோர்வு

### அரிதான அறிகுறிகள்

- தலைவலி மற்றும் உடல் வலிகள்
- தொண்டை வலி
- வயிற்றுப் போக்கு
- கண் எரிச்சல்
- சுவை அல்லது மணம் அறிய முடியாமை
- தோல் நோய் அல்லது கை கால் விரல்களின் நிறம் வெளிர்தல்



கொரோனா வைரஸின் வரைபடம்



## தொற்று பரவும் விதம்

நோய் அறிகுறிகள் கண்ட நபர் இருமும் போதும், தும்மும் போதும், வெளிப்படும் நீர்த்திவலைகள் மூலம் நேரடியாகப் பரவுகின்றன. இந்நீர்த் திவலைகளைத் தொடும் பொழுது கைகள் மூலமாகவும் பரவுகிறது.

## அரசின் அறிவுரைகள்

➢தேவையில்லாமல் வெளியே செல்வதைத் தவிர்த்தல்
➢சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
➢திருவிழா, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல்
➢45 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டோர் கட்டாயமாகத் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுதல்
➢அரசின் அறிவுறுத்தலின் படி நடந்து கொள்ளுதல்
➢தொற்று தென்பட்டால் 24 மணி நேர உதவி எண் : 011-23978046 அழைத்தல

நம் நாட்டின் அறிவுறுத்தலின் படியும் "தனித்திரு, விழித்திரு, வீட்டிலேயே இரு" என்ற முழக்கத்தின் படியும் கொரோனா தொற்றை ஒழிப்போம் என்று உறுதி ஏற்போம். நலமாக வாழ்வோம்.

கு.அருள்குமார்
முதலாம் ஆண்டு இளநிலை வேதியியல்

# உழைப்பாளர் தினம்

மே 1 என்றாலே அனைவரின் நினைவுக்கு வருவது உழைப்பாளர்கள் தான். தன்னுடைய உழைப்பின் மூலம் இந்தப் பூமிப்பந்தை அமைதியாக நகர்த்திச் செல்லும் அவர்களின் முக்கியத்துவம் எண்ணிலடங்காதது.

## சர்வதேச தொழிலாளர்கள் தினம்

| | | |
|---|---|---|
| அதிகாரப்பூர்வ பெயர் | : | சர்வதேச தொழிலாளர்கள் தினம் |
| பிற பெயர் | : | மே தினம் |
| கடைபிடிப்போர் | : | சோசலிசம் மற்றும் தொழிற்சங்கங்கள் |
| கொண்டாட்டங்கள் | : | ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் |
| நாள் | : | மே 1 |
| காலம் | : | 1 நாள் |
| நிகழ்வு | : | ஆண்டுதோறும் |

## தொழிலாளர் போராட்டம்

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் ஆகும். சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை கோரிக்கை ஆகும்.

## அனைத்து நாடுகளிலும் மே தினம்

1889 ஜீலை 14 அன்று பாரிசில் சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்" கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட்ட பலர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் காரல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாகக்கண்டித்ததோடு 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது. இந்த அறைகூவலே மே முதல நாளை சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுசரிக்க வழிவகுத்தது.

## இந்தியாவில் மே தினம்

இந்தியாவில் சென்னை மாநகரில் முதன்முதலில் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. பொதுவுடைமைவாதியும், தலைசிறந்த சீர்திருத்தவாதியுமான ம.சிங்காரவேலர் 1923 இல் சென்னை உயர்நீதி மன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவைக் கொண்டாடினார்.

ஆ.அபிஸ் மேத்யு
முதலாம் ஆண்டு பி.எஸ்.ஸி வேதியியல்

## பாகுபாட்டை வென்று சாதித்த மகளிர்

பாகுபாட்டை எதிர்த்துப் போராடிய மற்றும் சாதனை புரிந்த பெண்களைத் தமது வாழ்க்கையில் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

## பெண் கல்வியின் விடிவெள்ளி - மலாலா

மலாலா பாகிஸ்தானின் வடமேற்கிலுள்ள ஸ்வாட் பகுதியில் டிங்கோரா என்னும் ஊரில் பிறந்தவர். மலாலா யூசுப் சாயின் தந்தை ஒரு கவிஞர். தலிபான்களின் ஆதிக்கத்தால் தனது கல்வி உரிமை பாதிக்கப்படுகிறது என்று மலாலாவுக்குப் புரிந்தது. உலகமே கண்டு நடுங்கும் தலிபான்களை நோக்கி, என்னுடைய அடிப்படை உரிமையான கல்வியைத் தடுக்க இந்தத் தலிபான்களுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்? என்று கேட்டாள் மலாலா. இந்தக் கேள்வியை மலாலா கேட்ட போது அவளுக்கு வயது 11. பெண்களின் நிலை குறித்து 12 வயதில் பி.பி.சி.யில் ஒரு பள்ளி மாணவியின் டைரிக் குறிப்பு என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார் மலாலா. பெண் கல்வியின் அவசியத்தையும், கல்வி என்பது அனைவரின் அடிப்படை உரிமை என்றும் பேசினாள். பாகிஸ்தானின் இளம் அமைதிப்பரிசு 2011 மலாலாவுக்குக் கிடைத்தது. தலிபான்கள் மலாலாவின் உயிருக்குக் குறி வைத்தனர். சுடப்பட்டார் மலாலா. உலகமே துடித்தது. 2014ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு மலாலாவுக்கு வழங்கப்பட்டது.

## நம்பிக்கை ஒளி - விஞ்ஞானி வளர்மதி

அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர் விஞ்ஞானி வளர்மதி. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தொலையுணர்வு செயற்கைக் கோள் திட்டத்தின் முதல் பெண் இயக்குநராக உள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு விஞ்ஞானி வளர்மதி அவர்களைத் திட்ட இயக்குநராகக் கொண்டு ரிசாட் 1 என்ற செயற்கைக் கோள் விண்வெளியில் வெற்றிகரமாக ஏவப்பட்ட போது நாடே பாராட்டியது. இவை மட்டுமா அவரின் சாதனை. பிற செயற்கைக் கோள்களான IRNSS, சரல், ஜிசாட் 7, மார்ஸ் மிஷின், ஜிசாட் 14 என பல செயற்கைக் கோள் திட்டங்களில் சிறப்பாக செயல்பட்டார். கடந்த 2015ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் நினைவாக அவரது பெயரில் தமிழ்நாடு அரசு வழங்கும் முதல் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருதை தமிழக முதல்வர் அவர்களிடம் பெற்றார்.

## கனரக வாகனத்தை இயக்கும் ஜோதிமணி

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள கள்ளிப்பட்டி என்ற கிராமத்தைச் சார்ந்தவர் ஜோதிமணி. இவர் ஒரு முன்னுதாரணப் பெண். ஆம், பெண்கள் பலவீனமானவர்கள் அவர்கள் வீட்டிலேயே முடங்கி கிடப்பது அவர்களின் கடமை என்ற கற்பிதத்தை உடைத்தெறிந்தவர். கனரக வாகனமான டாரஸ் மற்றும் 10 சக்கரங்கள் கொண்ட சரக்கு லாரியை கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக ஓட்டி வருகிறார். தமிழ்நாடு மட்டுமல்லாமல் குஜராத் போன்ற நீண்ட தூரத்தில் உள்ள மாநிலங்களுக்கும் தொடர்ந்து 10 நாட்களுக்கும் மேலாகப் பயணம் மேற்கொள்கிறார். 2015ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, கல்பனா சாவ்லா விருதை திருமதி.ஜோதிமணி அவர்களுக்கு வழங்கி கவுரவித்துள்ளது.

## விமானத்தை இயக்கி சமத்துவத்தைச் சாத்தியமாக்கியவர்கள்

கடந்த 1991ஆம் ஆண்டு முதல் விமானப்படையில் பெண் விமானிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தற்போது 1500 பெண்கள் இந்திய விமானப்படையில் பணியாற்றி வருகின்றனர். அதில் 90 பெண்கள் விமானிகளாக உள்ளனர். இந்திய வரலாற்றில் முதன் முறையாக போர் விமானங்களை இயக்க பாவனா காந்த், அவனி சதுர்வேதி மற்றும் மோகனாசிங் ஆகிய 3 பெண் விமானிகள் விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரஷ்யாவின் சுகோய், மிக் 21, 27 ரக போர் விமானங்களை இயக்கும் பயிற்சி நிறைவு செய்துள்ளனர். நிறைவு நாள் நிகழ்ச்சியில் மூன்று பேரும் ஜெட் விமானத்தில் பறந்து தங்கள் திறமையை நிரூபித்தனர். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் குறிப்பிடும் போது ஆண்களுக்கு நிகராக பெண்களும் பாதுகாப்புத் துறையில் அனைத்து வகையான ஆயுதங்களையும் கையாளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று குறிப்பிட்டார்.

## இரும்பு மனுஷி - இரோம் ஷர்மிளா

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் மாநிலத்தைச் சார்ந்தவர் இரோம் ஷர்மிளா. இவர் 16 ஆண்டுகள் உண்ணாவிரதம் இருப்பதற்குக் காரணம் அந்த மாநிலத்தில் அமலில் இருந்த ஆயுதப்படைச் சட்டம். இச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும் அதனால் இச்சட்டத்தை மணிப்பூர் மாநிலத்திலிருந்து நீக்க வேண்டும் என்று கடந்த 2000ஆம் ஆண்டு நவம்பர் 2-ஆம் தேதி, தமது 27 வயதில் உண்ணாவிரதப் போராட்டத்தை மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் தொடங்கினார். உண்ணாவிரதத்தைத் தொடங்கிய மூன்றாவது நாள். காவல் துறையினர் அவரைக் கைது செய்தனர். அவர் தற்கொலைக்கு முயன்றதாகக் கூறி ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. மூக்கு வழியாக உணவு அவரது விருப்பமின்றி செலுத்தப்பட்டது. ஓராண்டு முடிந்து வெளியே வந்த அவர் மீண்டும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். மீண்டும் கைது, மீண்டும் ஓராண்டு சிறைத் தண்டனை என 16 ஆண்டுகள் தொடர்ந்தன. அதனால் இரும்பு மனுஷி என்று மணிப்பூர் மாநில மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். 2016 ஆகஸ்ட் 09ஆம் தேதி அன்று தனது 44 வயதில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

## மெட்ரோ ரயில் ஓட்டுநர் - பிரீத்தி

முதல் மெட்ரோ ரயிலைச் சென்னையைச் சார்ந்த பிரீத்தி என்ற 28 வயது பெண் ஓட்டினார் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். ஓட்டுநர் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டதும் சென்னை, டெல்லி ஆகிய இடங்களில் ஓராண்டு பயிற்சி பெற்றார். தற்போது 3 பெண்கள் ரயில் ஓட்டுநர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ஐ.ஏ.எஸ். தேர்வில் முதல் இடம் - திவ்யதர்ஷினி

ஐ.ஏ.எஸ். தேர்வில் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்று தேசத்தின் ஒட்டு மொத்தப் பார்வையைத் தமிழ்நாட்டின் பக்கம் திருப்பியவர் திவ்யதர்ஷினி. கல்லூரியில் இறுதிஆண்டுப் படிப்பை முடித்தபிறகு முதல்நிலைத் தேர்வு எழுதி வெற்றிபெற்ற அவர் பிரதான தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வை நம்பிக்கையுடன் எதிர்கொண்டார்.

## நம்பிக்கை கீற்று - கல்பனாசாவ்லா

இந்தியாவில் ஹரியானா மாநிலத்திலுள்ள கர்னால் என்ற சிறிய நகரத்தில் பிறந்தவர் கல்பனாசாவ்லா. சிறு வயதிலேயே விண்வெளிப் பொறியாளராக வரவேண்டும் என்பது தான் அவரின் விருப்பம். 1994 ஆம் ஆண்டு கல்பனாவின் கனவு நனவானது. விண்வெளி வீரர், வீராங்கனைகள் பயிற்சிபெற விண்ணப்பித்திருந்த சுமார் மூவாயிரம் நபர்களிலிருந்து ஆறு பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் தான் கல்பனா. ஜான்சன் விண்வெளி தளத்தில் பல்வேறு உடல் மருத்துவப் பரிசோதனைகள், கடுமையான நேர்காணல்கள் ஆகியவற்றை கடந்து வெற்றிகரமான விண்வெளி வீராங்கனையாகப் பரிணமித்தார். 1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி ஆறு வீரர்களுடன் கொலம்பியா வான்கலம் மூலம் விண்வெளிக்குச் சென்ற கல்பனா 16 நாட்களில் 252 முறை பூமியைச் சுற்றியதோடு சுமார் 65 இலட்சம் மைல் தொலைவு பயணம் செய்து வெற்றியுடன் பூமிக்குத் திரும்பினார். இரண்டாவது முறையாக 2003 ஆம் ஆண்டு மீண்டும் கொலம்பியா வான்கலம் மூலம் 16 நாட்கள் விண்வெளியில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு இறுதி நாள் பூமிக்குத் திரும்ப, பதினாறு நிமிடங்கள் இருந்த போது கொலம்பியா வான்கலம் விண்ணில் வெடித்துச் சிதறியது. கல்பனாசாவ்லா உட்பட அனைவரும் உயிரிழந்தனர்.

## பாரா ஒலிம்பிக் போட்டியில் சரித்திரம் - தீபா

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான தீபா 17 ஆண்டுகளுக்கு முன்பு முதுகுத்தண்டுவடத்தில் ஏற்பட்ட கட்டியை அகற்ற அறுவை சிகிச்சை நடந்த போது இடுப்புக்குக் கீழே உடல் உறுப்புகள் செயல் இழந்தன. சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு குண்டு வீசும் அவர் ஏற்கனவே உலக அளவில் பல போட்டிகளில் வென்றுள்ளார். இந்த நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டி 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரேசிலின் ரியோடி ஜெனீரோ நகரில் நடந்தது. இந்தியா சார்பில் பெண்களுக்கான குண்டு எறிதலில் இந்திய வீராங்கனை தீபா மாலிக் பங்கேற்றார். அதிகபட்சமாக 4.61 மீட்டர் குண்டு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பாரா ஒலிம்பிக் வரலாற்றில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற மகத்தான சாதனையை 45 வயதான தீபா மாலிக் படைத்துள்ளார்.

## விளையாட்டில் சரித்திரம்

### சானியா மிர்சா

மும்பையில் பிறந்து ஐதராபாத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சாமானியர்களும் சாதனை புரிய முடியும் என்பதற்குச் சானியா மிர்சா ஒரு சான்று. தனது ஆறு வயதிலேயே பேட்மிட்டன் விளையாட ஆரம்பித்த சானியா 13 வயதில் தொழில் முறை விளையாட்டில் கவனம் செலுத்தினார். விம்பிள்டன் போட்டியில் அதிக முறை வெற்றி பெற்ற இந்திய நம்பிக்கை நட்சத்திரம். ஒரு சர்வதேச போட்டியில் ஏன் செரினாவை வெல்ல முடியவில்லை எனக் கேட்டதற்கு அடுத்த சந்திப்பில் அது நடைபெறலாம் என தன்னம்பிக்கை பொங்க புன்னகைத்தார் சானியா.

### சாய்னா நேவால்

சாய்னா நேவால் ஹரியானா மாநிலத்தில் பிறந்து தற்போது தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் வசித்து வருபவர். பேட்மிட்டன் என்ற இறகுப் பந்தாட்ட விளையாட்டில் முடிசூடா மங்கையாக உள்ளார். பேட்மிட்டன் தரவரிசையில் இன்று உலகின் முன்னணி வீராங்கனை.

வாழ்வில் சாதிப்போம் சரித்திரம் படைப்போம்.

க.தீபா
முதலாமாண்டு இளநிலை வேதியியல்

# மழை

தங்கத்தை சேமிக்கும் தரணியிலே மனிதா உன்
சந்ததியின் தாகத்தை தீர்க்க எதை சேமிப்பாய்
மண்ணும் இளைத்தது மனிதன் தாக்கத்தால்
மரமும் இளைத்தது மனிதன் தாக்கத்தால்
கிணற்று நீரிலே குதித்தால் காப்பாற்ற நீச்சலடிப்பாய்
வெற்றுக் கிணற்றிலே விழுந்தால் எப்படி பிழைப்பாய்
குளத்தைப் பேணித்தால் உன் குலம் செழிக்கும்
குறகி நீரோட குளத்து நீர் வேண்டும்
வேளாண்மைக்கு பாசன முறையை பின்பற்று
நீர்க்கசிவுகள் இல்லாமல் பார்த்துக் கொள்
மழைத்துளி மண்ணில் விழுந்தால் வாசம்
மழைநீர் சுதந்திரமாய் தன் பாதையை
தேர்ந்தெடுக்கட்டும்
நிலத்திலே ஊறி நீண்ட ஆழமாய் நிரவி
பாய்ந்து பயனளிக்கிறது - அதை
மிதித்து வீணாக்கி மகிழ்கிறது மனித இனம்
ஆழ்த்துளையிட்டு கிணறுகளை தோண்டாதே
அக்குழிக்கு குழந்தைகளே இரையாகும்
மழையைக் காதலிக்கும் மரங்களை சேர்த்துவை
அவைகள் சேர்ந்து வாழட்டும்
மழைநீரை ஆண்டு முழுவதும் பருகலாம்
அதை முகிலிடம் கேட்டுப் பெற்றுக் கொள்
தண்ணீர் இரணம் என்பார்கள் முன்னோர்கள்
உலகில் நீயே பாதி பாகம் இருக்கிறாய்
ஆறுகள் அழுகிறது, குளங்கள் குமுறுகிறது
ஏரிகள் எதிர்ப்பார்க்கிறது, கிணறுகள் கிடக்கிறது
உனக்கும் உயிர் ஓட்டம் இருக்கிறது என
எதிர்ப்பார்த்து காத்திருக்கிறேன்
உனக்காக நான் அழுகிறேன்
குடத்தை ஏந்தி காத்திருக்கிறேன்
உன்னை எங்கே என தேடுகிறேன்
குழாயில் தேடுகிறேன்
வாய்க்காலில் தேடுகிறேன்
என் வாழ்க்கைக்காக தேடுகிறேன்
நான் வாழத் தேடுகிறேன்
மழையே நீ வருவாய் என ......

எஸ் பவித்ரா
முதலாம் ஆண்டு இளநிலை கணிதவியல்

# நீரின்றி அமையாது உலகு

விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி என்பது அரிய வாசகம் மழைநீரின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு. மழைநீர் மனித வாழ்வில் உன்னதமான இடத்தைப் பெற்றிருப்பது நாம் அறிந்ததே அத்தகைய மழைநீரை சேகரிப்பது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## மழைநீர் மண்ணின் உயிர்நீர் :-

மழைநீர் மனிதன் மட்டுமல்லாது இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்விலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நீரின்றி அமையாது உலகு என்ற வள்ளுவரின் கூற்று எந்நாளும் பொய்யாக வாய்ப்பில்லை இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த மழைநீர் பல இடங்களில் வீணாவதை நம்மால் காண முடிகிறது. மனித தேவைகளை பூர்த்தி செய்வதைக் காட்டிலும் மண்ணுக்கு நல்ல உயிரூட்டும் ஜீவன்போல் இருக்கும் மழைநீரை பாதுகாப்பது அவசியம்.

## விவசாயத்தில் மழைநீர் :-

தற்போதைய காலகட்டத்தில் நீரில்லாமல் மனிதன் ஆழ்துளைக் கிணறுகளை அதிக அளவில் அமைக்க ஆரம்பித்து விட்டனர். இது நிலத்தடி நீரை பெருமளவு பாதிக்கும். உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் ஆதாரம். உணவுகளை உற்பத்தி செய்ய நீர் தேவை. மழைநீர் இருக்கும்போது மட்டும்தான் அதனை பயன்படுத்த முடியும் என்ற அடிப்படை யுக்தியை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். சொட்டுநீர் பாசனம். தெளிப்புநீர் பாசனம் போன்றவற்றை பயன்படுத்தி நீர் தேவையை குறைத்துக் கொள்வது அவசியம்

## மழைநீர் சேகரிப்பு :-

மழைக்காலங்களில் நீர் வீணாவதை தடுக்க மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைப்பதன் மூலம் மழைநீர் சேகரிப்பினை அதிகரிக்கலாம். ஏரி குளங்களை அதிக அளவில் அமைப்பது முக்கியமான தேவையாக உள்ளது. கிராமப்புறங்களில் ஏரிகள் அமைப்பது எளிதில் நடத்தமுடியும் இதுபோன்ற திட்டங்களை ஊக்குவிப்பது அவசியம்.

## நீரை வீணாக்குவது பேரழிவு :-

நமக்கு நீர் இருந்தால் போதும் என்று எண்ணாமல் எதிர்கால தலைமுறைக்கும் நீரை சேமித்து வைப்பது நம் அத்தியாய கடமை. நிலத்தடி நீர் சேகரிப்பினை ஒவ்வொரு மனிதனுக்கு ஊக்குவிக்க வேண்டும். காடுகளில் உள்ள பல்வேறு உயிர்கள் நீரின்றி மாய்ந்து போவதை இன்று நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம் அவை நீரைத் தேடி நகரங்களுக்குள் வருவதையும் நாம் பார்க்கிறோம். எனவே நீர் என்பது மனிதனுக்கு மட்டுமென்று எண்ணாமல் அதை சேகரிப்பதில் ஆர்வம் காட்டினால் மட்டுமே எதிர்கால தேவைக்கு நீர் இருக்கும்.

## வீடுகளில் நீர் சேகரித்தல் :-

வீடுகளில் அதிக அளவில் நீர் உபயோகத்தை குறைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாத்திரம் கழுவிய நீரை புல்வெளிகளுக்கு பாய்ச்சுதல் மரங்களுக்கு ஊற்றுவது போன்றவை நீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

## மழைநீரின் ஆதாரம் மரங்களே :-

மரங்கள் மட்டுமே மழைநீருக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு எழ வேண்டும். காட்டில் உள்ள மரங்களை மனிதன் அழித்துக் கொண்டிருப்பது இயற்கை மாற்றங்களுக்கு முக்கியமான முதற்படி. மரமில்லையேல் மழையில்லை என்பது கூற்று. காடுகளை அழித்து மனைகள் கட்டி காடுகளை நகரங்களாக்கிவிட்டோம். மரங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோய் விட்டன. இனிவரும் காலங்களில் இருக்கும் மரங்களை அழிக்காமல் இருப்பதும் அதிக அளவில் மரக்கன்றுகள் நடுவதுமே மரங்களை காக்க ஒரே வழி. இதனை ஒரு உறுதிமொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். கல்லூரிகள் NSS அமைப்பின் மூலம் மரங்கள் நடத் தொடங்கி இருப்பது பாராட்டக்கூடிய ஒன்று.

வானிலிருந்து குதித்து வந்து மண்ணில் மடியில் தவழ்ந்து தாவர உலகில் விளையாடிவிட்டு மீண்டும் ஆவியாகி மழையாய் பொழிய கிளம்பிவிடுகிறான். ஒவ்வொரு உயிரிக்கும் ஒரு வாழ்க்கை சுழற்சி இருக்கத்தான் செய்கிறது. அதுபோலதான், நீரும் தன்னுடைய வாழ்வின் படிநிலையை புதுப்பித்துக்கொள்கிறது. அதனை தடுக்காமல் இருந்தாலே போதும். வாழு வாழவிடு என்ற வாசகம் நாம் அறிந்ததே. மழைநீரையும் ஒரு உயிரெனக் கருதி அதன் வாழ்வில் நாம் குறுக்கிடாமல் இருப்போம்.

முடிந்தால் நீரை சேகரி
முடியவில்லையேல் வீணாக்காதே.

எஸ்.ஐயப்பன்
முதலாம் ஆண்டு முதுநிலை கணினி அறிவியல்


1956ஆம் ஆண்டு இந்திய அச்சக நூல்களின் பதிவுச் சட்டம்
விவர அறிக்கைப் படிவம் விதி 8

| | |
|---|---|
| வெளியிடப்படும் இடம் | : திருப்பூர் |
| வெளியிடப்படும் காலம் | : ஆண்டுக்கு ஒரு முறை |
| அச்சிடுவோர் பெயர் | : ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ் |
| தேசிய இனம் | : இந்தியர் |
| முகவரி | : 201, மங்கலம் ரோடு, கருவம்பாளையம், திருப்பூர் - 641 604 |
| வெளியிடுவோர் பெயர் | : முனைவர் வ.கிருஷ்ணன் |
| தேசிய இனம் | : இந்தியர் |
| முகவரி | : முதல்வர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |
| ஆசிரியர் | : முனைவர் சி.அமிர்தராணி |
| தேசிய இனம் | : இந்தியர் |
| முகவரி | : வணிகவியல் துறை இணைப் பேராசிரியர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |

முனைவர் வ.கிருஷ்ணன் ஆகிய நான் இதன் மூலம் மேலே காணப்படும் விபரங்கள் யாவும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மை என நம்பகமாக அறிவிக்கிறேன்.

ஒப்பம் -
வெளியீட்டாளர்

திருப்பூர்
07-05-2021

# ECOLOGY EXPLOITED AND SCIENCE MISUSED – A REVIEW ON KIM STANLEY ROBINSON'S *RED MARS*

The outbreak of the second wave of COVID -19 pandemic serves as a major global health disaster today. The pandemic that spread at an alarming rate across the globe has also caused wreckage in India. Lack of oxygen supply and hospital beds, rapid surge in the number of deaths, unidentified bodies floating on river Ganga and many more such incidents has led to a desperate and pathetic situation. Panic, pain and agony has shattered the country. As India is battling the deadly virus, it's also a wakeup call to humanity on the use of science, preservation of nature and a growing need for ecological awareness.

Science fiction is one of the suitable genres to explore environmental issues, political and economic crisis. The SF writers like Arthur C. Clarke, Ursula K. Le Guin, Philip K. Dick, H. G. Wells and Kim Stanley Robinson often explore the destructive aspect of science in their novels. SF in general has a significant interconnection with pandemic situation as well. As Mayurika Chakravorty states, "the connection between science fiction and pandemics runs deeper. They are linked by a perception of globality". He further writes that, "globality is central to science fiction. To be identified as an Earthling, one has to transcend the local and national and sometimes, even the global, by embracing a larger planetary consciousness".

Kim Stanley Robinson is considered as America's greatest science fiction writer. He has written nearly twenty novels, short stories and non-fiction essays. He has been honoured with numerous science fiction awards like Hugo, Nebula, Locus and John W. Campbell Memorial Award. Robinson's most popular novel *Red Mars* is the first book of the *Mars Trilogy.* The plot begins with the journey of hundred astronauts to Mars and their struggle to survive on the alien planet. It also deals with the terraforming of Mars, capitalist attitude of private transnational corporations and the final outbreak of the revolution.

***Red Mars*** depicts the life of hundred cosmonauts who are sent to Mars to build the first human settlement on Mars. After establishing the first settlement, the private corporate companies called transnats, provides the permission to terraform Mars. Ann, a geologist is against terraforming and wants the natural Mars to remain untouched. But the scientists like Sax want to terraform Mars and change it into another Earth. During the process of terraforming they discover the longevity treatment to enable long life. They also invent the space elevator which connects Mars and Earth. In the name of terraforming the private companies begin to loot the resources of Mars.



Kim Stanley Robinson

On the other hand, Earth is in crisis because of over population. The introduction of longevity treatment creates havoc on Earth. The longevity treatment is considered as an optimistic invention of science. But when it is introduced on Earth, it leads to the civil war among the rich and the poor nations. The longevity treatment is used as a weapon to break the unity among the nations on Earth. In the same way the space elevator is used in the illegal transportation of Martian resources to Earth.

All these inventions result in destruction at the end of the novel. The space elevator is made to fall from Phobos leading to the death of people. The side-effects of the Longevity treatment leads to memory loss. Earth also suffers from over population, civil war and global warming. Antarctica, the last purest place on Earth is also destroyed for drilling oil out of it. Global warming results in the extinction of the Phytoplankton.

The novel ends with revolution and the destruction of Mars. Robinson gives a realistic and thought provoking novel focussing on the misuse of science and lack of ecological awareness that ultimately leads to the destruction of both Mars and Earth. Robinson echoes the thoughts of millions of people to join hands to save humanity from this global disaster. He warns mankind about the consequences of using science for selfish and materialistic gain. It's the need of the hour for academicians, scientists and bureaucrats across the globe to come together to save the world for the coming generation.

**Reference**


Chakravorty, Mayurika. "Science fiction explores the interconnectedness revealed by the coronavirus pandemic." http:// theconversation.com. 19, July 2020.



P. Gokilapriya, M.Phil. Research Scholar,
Dept. of English

## NEUROTHERAPY

In the search for an alternative way of healing, neurotherapy, founded by Dr. Lajpatraj Mehra serves as the best remedy. It works without the use of medicine by directing the blood circulation to the weaker organs and strengthens it in due course.

Neurotherapy functions on the fact that the human body itself has the unique ability to heal itself without the aid of an external source. The human body secretes certain hormones and chemicals which automatically heals the body without any drugs. These fluids secreted by the different organs are responsible for the metabolism of the human body. Any disruption in the fluid system leads to the mental and physical illness.

Neurotherapy stimulates these body fluids through massage or pressure on the nerve ends and helps the body to regain its health by rectifying the hormonal imbalance. The therapy is based on identifying the cause of the disease and does not focus on the symptoms. Neurotherapy is widely used in treating disabled children, paralysis, joint pain, arthritis, hormonal imbalance, diabetes, heart and liver disorder.

This therapy is carried on without any instrument. The therapists use their hands and feet to press at fixed points to stimulate the body fluids. Hence the people undergoing the treatment do not experience any pain while being treated.

**Reference**

https://www.neurotherapyhealthcare.com/neurotherapy.htm



M.Nandini, II M.Sc. Zoology

## Project Soli by Google

Project Soli, driven by Google's Advanced Technology and Projects (ATAP) team, was first showcased back in 2015. The idea is that a radar chip can be used to detect hand movements and gestures to interpret what they could mean. Soli is a miniature radar that understands human motions at various scales: from the tap of your finger to the movements of your body.

Salient Features:

- You are the only interface you need.
- Wave hello to Soli.
- Interaction that feels hu 
- The language of nonverbal communication.
- The Soli movement library consists of units of interaction which can be used to build complex interactive experiences that go beyond touch and voice.
- 360° sensing - Soli understands movement from all angles.
- Low power - Soli is sensing to detect movement at a low power.
- Smart detection - Soli detects objects and motion through various materials for seamless interaction.
- Private - Soli is not a camera and doesn't capture any visual images.
- Active - Soli actively recognizes and responds to your gestures.
- Soli technology is integrated in Google's Pixel 4 smart phone as "Introducing Motion Sense™."



Button Dial Slider

Dr. A. Geetha,
Assistant Professor and Head, Dept. of Computer Science

# Psychological Steps to overcome this Pandemic Crisis

A theory developed by psychiatrist Elisabeth Kubler- Ross suggests that we go through five distinct stages of grief after the loss of a loved one, at tough and rough times, a huge financial loss, a major crisis, post war, after a big setback, some health complications, after a natural disaster and calamity, after losing a relationship…and yes during this time of Pandemic, Covid -19 too.




**Five distinct stages of grief are**

1. Denial – not accepting
2. Anger – emotional outburst
3. Bargaining - compromising
4. Depression – mentally down
5. Acceptance – with hope and courage to face.




So, the solution is to quickly move from the Denial stage to Acceptance stage, understanding the purpose and meaning of one's life in this planet Earth. As the famous quotes say "Dear God, grant me the serenity to accept the things that I cannot change, Courage to change the things I can and Wisdom to know the difference."

Dr. A. Geetha, Assistant Professor and Head, Dept. of Computer Science

## SPREADING POSITIVITY DURING CRISIS

*"Keep your face to the sunshine and you cannot see a shadow." - Helen Keller.*

*Feels like Helen Keller and many great personalities had predicted this grave crisis and had given us these beautiful and enthralling quotes to stay positive and to spread positivity during this crisis. It really is hard to wake up every morning, do our regular routine, stare at the wall and go to bed. We all have to admit that. Isn't it? Many of us have just got used to hang out with friends, throw a party, exploring new places and have fun wherever we go. But now, locked up within the four walls of our house. Ouch! That hurts. It's like telling a bird not to fly! Now, that is just harsh! Anyway, we all have to face this crisis in one way or another. But hey! Why not make the best out of it? It's not like we have got our limbs tied up! Look at the bright side!*

*This is the time to fulfil some of our wildest dreams. All of us would have had some desire of doing something which we were not able to do because of work, school, college and what not. Don't you think this is the time to try all those things which you had all locked up inside of you? Yay! The whole 'doing what you had always wanted to do' would've put a huge smile on your face. Whoa! Whoa! Whoa! Hold your horses! Before you get into some mischief, let's think about something. Why not get everyone into the mischief you are planning to do? You are wiggling your eye brows, aren't you? Okay! Get yourself ready to face some chaos in the house people!*

*Even though you've already got a huge box of things you want to do, here are some interesting things that can help you to keep yourself occupied and also to spread good vibes during the present situation.*

### ***Get into gardening:***

*_Look at those nature and plant lovers! Thinking about what new plant to plant in your garden, aren't you? Gardening has benefits beyond what we think. Gardening exposes us to the sunlight, which is a great source of Vitamin D. Also, I t's a great way of killing time instead of staring at the wall or your phone. It also calms your mind, makes you feel relaxed and this is best for people who live alone.*



## *Connect with your family and old friends:*



Work! Work! Work! Even though work is important, many of us had failed to spend some quality time with our family. And thank God! This is the best time!!! Go get a huge bowl of popcorn and binge watch a comedy movie with your family for old time's sake with a nice game of chess and snakes-and-ladders! What a pleasure! What a pleasure! Google meet, zoom, skype, google duo, Cisco WebEx... wow! Infinite number of video calling apps! Schedule a meeting with your family and friends and crack some bad jokes, will ya? It not only helps you to feel happy but also to spread some good vibes to your family and friends.

## Get that apron and that toque on:

Unleash that master chef growling inside you! Try new recipes. Tell me, how long will you eat the same boring food? You've got yourself some great cooks to teach you how to make mouth-watering dishes on YouTube. Try making some macarons, take a picture and post it on social media! You inspire your friends to make your recipe and also you get to eat something delicious. Yes, two mangoes from one stone.



## Become a director:



There are people who are talented in various things. Take that abandoned camera and guitar, sing a song and upload it on YouTube. Not just that, you can do a vlog. Let people know what you are doing during this time and entertain them by making fool of yourself. Well, not exactly by making fool of yourself. Share your interests. Sometimes that will inspire many to do some interesting things. Ultimately, you are going to get yourself many subscribers! Write a story. Share it with your friends. Who knows, you can become a famous author. Just an idea. Just an idea.

## Helping the Helpers:



Have you ever thought about those people other than the doctors and police officers who help off the record each and every day? From the person who provides natural health beverages at our door step to the milkman, sweeper and many more volunteers who help us even though they are not given enough recognition. How about each of us take a piggy bank and save some money each day so that we can give them the money when the pandemic is over as a gift? Think about how they would feel when they realize that their work has been recognized? They would feel extremely happy right? Now, where is that piggy bank? Let us save some money! Last but definitely not the least...

## Pray for the world and show support:

To face the pandemic, the world and its people in it need strength, the government, the doctors and all those people who are trying so hard to help all the people need a strong will power, strength and love. We cannot do anything to help them practically, but we can pray for them and show them our support through social media. Pray for each and everybody in our world so that this crisis ends soon and we all can get back to our normal lives.



So friends, these are some things which you can do to kill time and stay sane during this crisis. It is kind of difficult to get used to this new normal but during this time we should not lose hope and should try to look on the bright side. Remember, there's always a day after each night!!

Dr. Jelince Dhinakar Abraham, Assistant Professor in Business Administration

# The Photographers

They see the world with lenses

They focus the happiness and blur the unnecessaries

They understand the atmosphere with zoom in and zoom out

They freeze the smile and make them smile again

They get satisfied simply exploring their surrounding

They are never planned, but live just for the moment

Yet, without them the world can't recall what happened !!!

R.Rohith, III B.B.A.

## BELOVED MOTHER



Beloved mother, mom, momma
Protagonist of my drama;
Too lovable my dearie
Superwoman of my story
Let me start
With my heart beat
For you're the one
Who first felt it
The pain that you've endured
And enduring is solid
Yet you are determined
For fate cannot break you
A woman of integrity
Who taught me honesty
Whom I will love
For all the eternity

## A TESTIMONY TO LEAVES' TALE



The quiet sky
Under which
Leaves' talk: Demystify
Life; to which
I bear testimony...
All agony
Haste flee,
Which relieved me
Under the tree;
Was standing me
With great envy...

M.Antony Raj, II M.A. English Literature

## IN BORDER PEAK WITH PEAK HAPPINESS

It was an ambition at three
I saw a battalion trained:
They sounded with great aspiration;
Their aspiration become a melody inspiration
The camouflaged sepoys were in my eyes
I wandered round and round along with them...
As I grew, my ambition bloomed
It was like fantasy so far
Once I determined; realised the reality
And hardships of a sepoy that peaked my heart
My heart and melody; and my camouflage caught eyes;
All those hankered my desire
It was a long way to reach my goal
Finally at eighteen amidst them...
My heart baffled in pride
Now I could sing the melody I longed to sing
In border peak with peak happiness
For my motherland.

S.Dharani, II M.A. English Literature

## TRICKY RIDDLES

1. Guess the movie described with the emojis! (Hint: It's also a famous kids' story!)



2. Identify the word in the picture.



3. If a lion had a Christmas music album, what would it be called?



4. Which is heavier? A pound of feathers or a pound of rocks?



5. What can travel around the world while staying in a corner?



6. "People buy me to eat, but never eat me? What am I?



7. "I exist only when there's light, but direct light kills me". What am I ?



8. Find the odd one out!




**Courtesy:** https://www.mentalup.co/img/blog-pdf/tricky-riddles-with-answers-printable.pdf

## ANSWERS

1. Cindrella

2. Exercise

3. Jungle Bells

4. Neither. Both weigh a pound!

5. A stamp.

6. It's a plate!

7. Shadow

8. Answer is 1



**M.Sowmiya, II B.A. History**




**V.Liganadhan I B.Sc(CS)**



**D.Pandiselvi, II B.A. History**



**K.Poornima, III B.A. History**



**A.MANOJ I M.A. English Literature**



P. MONISHA I M.Com.



P. MONISHA I M.Com.



A.Annapoorani, II MA English Literature



M.R.MohamedMufees, III BBA









**Vinocia, III BBA**



தேசிய மாணவர் படையினர்
தூய்மை இந்தியாத் திட்டத்தின் கீழ்
கல்லூரி வளாகத்தினை தூய்மைப்படுத்துதல்




கோவை அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற
இந்தியா-பாகிஸ்தான் போரின் வெற்றிக் கொண்டாட்ட விழாவில்
நம் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவி
வாசுகி தேவி பதக்கம் பெறுதல்




23-01-2021இல் நஞ்சராயன் குளத்தில்
விலங்கியல் துறை மாணவ மாணவியரின்
பறவைகள் கணக்கெடுப்பு




12-03-2021இல் விலங்கியல் துறை நடத்திய
முப்பெரும் விழாவில்
வன உயிரியல் பாதுகாப்பு படத் தயாரிப்பாளர்
திரு. கோவை சதாசிவம் அவர்களின் சிறப்புரை



09-04-2021இல் தமிழ்நாடு மாநில
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின்
நிதி உதவியுடன் வேதியியல் துறை
நடத்திய தேசிய அளவிலான இணையவழிக் கருத்தரங்கு



01-04-2021இல் வேதியியல் துறை நடத்திய
கல்லூரி வளாக வேலை வாய்ப்பு முகாமில் துறைத்
தலைவரின் அறிமுக உரை



20-02-2021 அன்று சாலைப் பாதுகாப்பு மாதம்
நிறைவு விழாவில் திருப்பூர் மாவட்டக்
காவல் துறை ஆணையர்
திரு.G.கார்த்திகேயன் ஐ.பி.எஸ் அவர்கள்



26-01-2021 அன்று குடியரசு தின விழாவில்
பாராட்டுபெறும் நம் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம்
அலகு 2 அலுவலர் முனைவர்
ஆ.மோகன்குமார்



தமிழக சட்டமன்றத் தேர்தலில் 06-04-2021 அன்று
ஒரு நாள் மட்டும் சிறப்பு காவல் அலுவலராகப் பணியாற்றிய
இரண்டாம் ஆண்டு வரலாற்றுத் துறை மாணவன்
எம்.சீனிவாசன



தமிழக சட்டமன்றத் தேர்தலில் சிறப்பாகக் களப் பணியாற்றிய
இரண்டாம் ஆண்டு வரலாற்றுத் துறை மாணவி
பி.ஹரிஷாலினிக்கு மாவட்டக் காவல் துறை ஆணையர்
பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்



வாக்காளர் விழிப்புணர்வுக்காக நடைபெற்ற
திருப்பூர் மாரத்தான் 2020-2021ல்
தன்னார்வலர்களாகப் பணியாற்றிய
வரலாற்றுத் துறை மாணவ மாணவியர்



RUSA நிதி உதவியுடன்
கல்லூரி வளாகத்தில்
அமைக்கப்பட்டுள்ள
Common Computing Lab